# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 14 திங்கட்கிழமை (26-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:91


# சொல்ஹெய்ம் இவ்வாரம் கொழும்புக்கு வருகிறார்!

## முன்னேற்றகரமான ஆலோசனைகளுடன்

கொழும்பு,பெப்ரவரி26

**இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் முன்முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இவ்வாரம் கொழும்பு வருகின்றார்.**

**தீர்வுக்கான முன்னேற்றகரமான ஆலோசனைகளுடன் அவர் கொழும்பு வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.**

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் நேரடியாகப் பேசவைத்து, அதன் மூலம் இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு ஒன்றைக் காண வைக்கும் முயற்சியாக இரு தரப்புடனும் சொல்ஹெய்ம் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

கடந்த வாரம் அவர் லண்டனில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் - பல மணிநேரம் - விரிவான பேச்சுக்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் மோதல்

கொழும்பு,பெப்.26

கிளாலி முன்னரங்க நிலைகளில் இருந்து முன்னேறிச் சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த சனியன்று மோதல் ஒன்று இடம்பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

அதேதினம் முகமாலை முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார்த் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

(உ-3)

## அக்கரைப்பற்றில் மோதல் சம்பவம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் அக்கரைப்பற்றில் கண்ணகிபுரம் என்ற இடத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதல் ஒன்றில் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படையினரும், அந்தப் பகுதியால் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் நேருக்குநேர் சந்தித்ததை அடுத்து மோதல் வெடித்ததாகவும் -

விடுதலைப் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் - படைத்தரப்புத் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் தகவல் ஏதும் வெளியிடவில்லை.

(உ-3-21)

## மட்டக்களப்பு நகர மத்தியில் காணப்பட்ட சுவரொட்டிகள்

மட்டக்களப்பு,பெப்.26

இராணுவச் சிப்பாய் ஒருவர் மண்டை ஓட்டுக் குவியலுக்கு முன்னால் அமர்ந்திருந்து கண்ணீர் சிந்துவது போன்ற படத்துடன் கூடிய சுவரொட்டிகள், உயர் பாதுகாப்பு வலயமான மட்டக்களப்பு நகர மத்தியில் ஒட்டப்பட்டிருந்ததை நேற்று முற்பகல் வேளையில் அவதானிக்க முடிந்தது.

"மட்டக்களப்புப் படுகொலைகளை முதற்தடவை ஒப்புக்கொண்டு வருந்தும் இராணுவம்" என்று அந்தச் சுவரொட்டியில் எழுதப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு படுகொலைகள் குறித்து இராணுவத்தரப்பில் கடந்த மாதம் முதல் தடவையாக மன்னிப்புக் கோரப்பட்டதாக வெளியான செய்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்புவதை எதிர்த்து ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

### வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடு

பிறீமன்,பெப்.26

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட சுமார் நூற்றுக்கும் அதிகமான ஈழத்தமிழ் அகதிகளை அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்போவதாக அந்த நாட்டு அரசு அறிவித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜேர்மனின் பிறீமன் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட உள்ளது.

ஜேர்மனில் இயங்கும் தமிழர் சுயநிர்ணய உரிமைக்கான ஒருமைப்பாட்டு அமைப்பும், மனித உரிமைகளுக்கான அமைப்பும் ஒன்று சேர்ந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

பிறீமன் நகரின் ரயில் நிலையத்தின் முன்பாக இருந்து ஆரம்பமாகவுள்ள இந்தப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு ஜேர்மன் வாழ் ஈழத் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பேரணியின் ஏற்பாட்டாளர் ஒருவர் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(உ-7)

## புலிகளுடன் பேசும் எண்ணம் அரசுக்கு அறவே கிடையாது!

### அமைச்சர் டக்ளஸ் பேட்டி

கொழும்பு,பெப்.26

'எங்கள் அரசாங்கம்' விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைக்காது.

- இப்படித் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

தமிழகத்திலிருந்து வெளியாகும் 'துக்ளக்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

பேச்சுக்களில் விருப்பம் இருப்பதுபோலப் பாசாங்கு செய்யும் விடுதலைப் புலிகள், தமது உண்மைச் சொரூபம் அம்பலமாவதை மறைப்பதற்காகவே யுத்தநிறுத்தத்தை அறிவிக்கின்றார்கள் என்று இந்தப் பேட்டியில் அமைச்சர் டக்ளஸ் புலிகள் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

"விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைக்கும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லாத போதிலும் அத்தகைய வாய்ப்புகள் குறித்து ஆராயப்படுவதாக வதந்திகள் உலாவுகின்றன. அவை உலகச் செய்திகளாகப் பரப்பப்படுகின்றன" - என்கின்றார் டக்ளஸ்.

"பேச்சுக்கள் மூலம் புலிகளின் இரட்டைவேடம் அம்பலமாகாதா?" - என்ற கேள்விக்கு மறுக்கும் பதிலை அளித்தார் அவர்.

"பேச்சு என்பது வெறுமனே ஏமாற்று வேலை; பாசாங்குச் செயல். நீங்கள் கூறுவதுபோல பேச்சு என்றாலும் அடுத்தது என்ன? அரசாங்கம் ஒரு யுத்தநிறுத்தத்தை அறிவித்தாலும், ஈழத்தில் எஞ்சியிருக்கின்ற சிறிய எண்ணிக்கையான இளைஞர் யுவதிகளும் மிரட்டியோ, மூளைச் சலவை செய்யப்பட்டோ பயிக்கடாக்கள் ஆக்கப்பட்டுவிடுவர். அவர்களுக்குத் தேவையான ஆள்கள் திரட்டப்பட்டதும் யுத்தம் மீண்டும் ஆரம்பம்



ஆகிவிடும்" - என்று கூறுகின்றார் டக்ளஸ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமத்தின் பல இடங்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் நேற்று விஜயம்

யாழ்ப்பாணம்,பெப்.26

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா மானிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, மல்லாகம், தெல்லிப்பழை, சுன்னாகம் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினார் என ஈ.பி.டி.பி. நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரவதை, வல்லுறவுகளை உறுதிப்படுத்த சட்ட வைத்திய அதிகாரிகள் இங்கு இல்லை

### அரச சட்டத்தரணி விசனம்

மட்டக்களப்பு,பெப்.26

வடக்கு- கிழக்கில் நிரந்தரமான சட்ட வைத்திய அதிகாரிகள் இல்லாததால் இங்கு இடம்பெறும் சித்திரவதை, பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பாக சரியான தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குக் கிடைப்பதில்லை.

அரச சட்டத்தரணியான செல்வி சுகந்தி கந்தசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஹோட்டல் ஒன்றில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

சூரியா பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் சித்திரவதை மற்றும் பாலியல் வல்லுறவு தொடர்பான சம்பவங்கள் இடம்பெறுவதாகக் கூறப்பட்டு வருகிறது. ஆனால் அவை தொடர்பான தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கிடைப்பதில்லை.

இங்குள்ள வைத்தியசாலைகளில் நிரந்தரமான சட்ட வைத்திய அதிகாரிகள் இல்லாததால் அந்தச் சம்பவங்கள் தொடர்பாகச் சரியான பரி சோதனைகள் மேற்கொள்ளப்படுவதும் இல்லை; அவை தொடர்பாக அறிவிக்கப்படுவதும் இல்லை.

இந்த நிலை மாற்றப்பட்டால்தான் இத்தகைய சம்பவங்கள் பற்றிய தகவல்களைப் பெறமுடியும் - என்றார்.

(உ-3)

## அனுருத்த குறித்து விசாரணை நடத்தக் கோருகிறார் ஜயரட்ண

கொழும்பு,பெப்.26

தனக்கு எதிராக செய்தி ஊடகங்களுக்குத் தெரிவித்தனர் எனக் குறிப்பிட்டு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை மற்றும் இரு பிரதி அமைச்சர்கள் மீது ஒழுங்காற்று விசாரணைகள் நடத்துமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றையும் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அனுருத்த ரத்வத்தையுடன் பிரதிப் போக்குவரத்து அமைச்சர் மகிந்தானந் அழுத்கமமே, பிரதி நீர்வளத்துறை அமைச்சர் மகிந்த அபயக்கோன் ஆகியோரே ஒழுக்க விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் டி.எம்.ஜயரட்ண தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

இந்த மூவரும் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறித் தவறான செய்திகளை வெளியிட்டு வந்தனர் எனவும் அமைச்சர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(உ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

## 26-02-2001



## செல்வன் பாலராஜா தர்சன்

திருநெல்வேலியைச் சேர்ந்த

**பாலராஜா - சரோஜினிதேவி** தம்பதிகளின்

செல்வப் புதல்வன் **தர்சன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.02.2001) திங்கட்கிழமை தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா, மாமி, சித்தி, அண்ணாமார், உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*திரு.பாலராஜா* (தந்தை)

திருநெல்வேலி. (C/15462)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 03 - 1923



மறைவு 09 - 03 - 2000

## திருமதி பூபதி அப்புத்துரை

(இளைப்பாறிய ஆசிரியை)

**திதி: 26.02.2001**

அன்பின் வடிவே!
அறிவின் சுடரே!
வாழ்வில் ஒளியேற்ற
வந்த எம் அன்னையே!
ஏதுமொரு குறையுமின்றிக்
காத்த எம் தெய்வமே!
உன் கடமை தீர்ந்ததென்றோ
விண்ணகம் நீ சென்றுவிட்டாய்?
ஆண்டொன்று ஆனாலும்
உன் நினைவென்றும் மாறாது!

"கந்தகோட்டம்",
81, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

துயருடன்:
*கணவர், பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

(84632)

## செயற்பாட்டறை திறப்பு

காரைநகர்,பெப்.26

காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்விச் செயற்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி மூலம் அமைக்கப்பட்ட இந்தச் செயற்பாட்டறை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (ஜ-73)

## கூ.சங்க உறுப்பினர்களுக்கு சைக்கிள்கள்

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சங்க அங்கத்தவர்கள் 60 பேருக்கு சங்கக் கிராமிய வங்கி மூலம் கடன் அடிப்படையில் சைக்கிள்கள் வழங்கியுள்ளனர்.

சங்கக் கிளைக் குழுக்களால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு இரண்டு கட்டங்களில் சைக்கிள்கள் வழங்கப்பட்டதாக சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். (ஜ-117)


பொருளியற் கல்லூரி
இணுவில்
A/L 2001
கிரயக்கணக்கீடு
B.முகுந்தன்
B.B.A.(HONS)F.M.(SPL)
இப்பாட அலகுக்காக யாழ். நகரை நோக்கிச் செல்ல விரும்பாத அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இப் புதிய பிரிவு. (84636)
ஆரம்பம்: நாளை (27-02-2001) செவ்வாய் 3.30 (பழைய நேரம்)

லாலா சோப் ஸ்தாபனத்தாரின்
அதிர்ஷ்ட நாள்
பவுண் பரிசுகள்
28-02-2001 (புதன்கிழமை)
லாலா சோப்
அச்சுவேலி
(C/15463)

ராஜா யாழ்ப்பாணம்
கார்த்திக், திவ்யாஉன்னி மற்றும் பலர் நடிப்பில்
கண்ணன் வருவான்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே)
02.03.2001 முதல்
டைட்டானிக் (தமிழ்-ரீல்ஸ்)
(C/15311)

லஷ்சுமி இணுவில்
அஜித், சிம்ரன் நடித்த
உன்னைக்கொடு என்னைத் தருவேன்
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00 2.30 (புதிய நேரம்)

நாகம்ஸ் சுன்னாகம்
குணால், சோனாலி ரம்பா நடித்த
காதலர் தினம் (ரீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
28ஆம் திகதி முதல்
அப்பு
(C/15404)


உ

கோண்டாவில் மேற்கு

## ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான

# மகாசபைப் பொதுக்கூட்டம்

*காலம்* : 09.03.2001 வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணி

*இடம்* : மேற்படி ஆலய மண்டபம்

*தலைவர்* : திரு.ச.செல்வரத்தினம்

### நிகழ்ச்சி நிரல்

1) *தேவாரம்*
2) *தலைமை உரை*
3) *செயலாளர் அறிக்கை*
4) *பொருளாளர் அறிக்கை*
5) *கோயில் பரிபாலன விதி அங்கீகாரம் பெறுதல்*
6) *வேறு விடயங்கள்*
7) *புதிய நிர்வாக சபைத் தெரிவு*
8) *நன்றியுரை*

மகாசபை உறுப்பினர்களாகிய உபயகாரர்கள் அனைவரையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

*குறிப்பு: ஆலய விதிமுறைகள் (யாப்பு) ஆலய முன்றலிலுள்ள செய்திப் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமான திருத்தங்கள் ஏதாவது இருப்பின் எழுத்து மூலம் ஆலய பரிபாலன சபையின் (பொதுக்கூட்டத்துக்கு முன்பாக) செயலாளருக்கு அறியத்தரவும்.*

ச.செல்வரத்தினம் (தலைவர்) (84634) த.சிவராஜா (செயலாளர்)


டீசல் மின் பிறப்பாக்கிகள்
நம்பிக்கையானது.... சிக்கனமானது.... நீடிய பாவனை....
WATER COOLED (நீர் குளிர்மை) 3.5 KVA TO 200KVA PRIME
AIR COOLED (காற்று குளிர்மை) 15 KVA TO 70 KVA PRIME
தொடர்பு: ஷமால்/சுரேந்திரா, 691186 நேரடி
ஏக விநியோகஸ்தர்:
மக்வூட்ஸ் லிமிட்டெட்
10, ஞானந்த பிரதோப மாவத்தை, கொழும்பு - 08.
தொலைபேசி: 697965-9, 696051-52
FAX: 699454, E.MAIL: MACK WOODS @ LANKA CCOM.LK.
(C/15439)


லாலா சோப் ஸ்தாபனத்தாரின்

# பாராட்டுக்கள்



மாண்புமிகு அமைச்சர்

கௌரவ **கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

### தகவல் தொழில் நுட்பப் பூங்கா

அவர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் யாழ். மாணவர்களின் நலன் கருதி தகவல் தொழில்நுட்பப் பூங்காவை ஆரம்பித்து வைத்த மதிப்புக்குரிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் லாலா சோப் ஸ்தாபனத்தார் பெருமை அடைகின்றனர். இந்த நன்றிக் கடனை என்றென்றும் யாழ்.மாணவர்கள் இதயத்தில் வைத்திருக்க ஆஞ்சநேயர் சுவாமி அருள் புரிவாராக!

லாலா சோப் தொழிற்சாலை,
*அச்சுவேலி.*

(C/15464)


விற்பனைக்கு
அதிநவீன கணனிகள்
Pentium III 800 MHz (Multimedia)
கையடக்கமான LAPTOP (TOSHIBA) கணனிகள், PRINTERS, UPS etc.
※ நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய அதிநவீன கணனிகள் நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
※ கணனிப் பாவனைக்கான ஆலோசனையும், அடிப்படைப் பயிற்சியும் இலவசம்.
※ கணனிகளின் சிரான பராமரிப்புக்கான, விற்பனைக்குப் பிந்திய சேவையுடன் கணனிகள், கணனிக்கான உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்ள:
IIS SALES UNIT
100,Clock Tower Road, Jaffna.
☎2831
E.Mail-iis@sltnet.lk
(C/15465)

# உதயன்

## செவிடன் காதில் ஊதிய சங்கு!

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசு இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

காரணமின்றிக் கைது செய்தல், விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைத்தல் போன்றவை இடம்பெறுகின்றன என்றும் —

வடக்கு—கிழக்கிலேயே இவை அதிகளவில் இடம்பெறுகின்றன என்றும் —

ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இதேசமயம், வத்தளை பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த போது சித்திரவதைக்கு உள்ளானதாகக் கூறப்படும் இளைஞருக்கு 30 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கும்படி உயர்நீதிமன்றம் கடந்த வாரம் பிற்பகுதியில் உத்தரவிட்டிருக்கின்றது.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல இந்த வழக்கை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

தமிழ்இளைஞர் சித்திரவதை செய்யப்பட்டது — அதுவும் பொலிஸ்காவலில் சித்திரவதை செய்யப்பட்டது — நீதிமன்றத்தில் நிருபிக்கப்பட்டுள்ளது. அதற்காக அரசு அவருக்கு 30 ஆயிரம்ரூபா நஷ்டஈடு செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கின்றது.

யாரும் சித்திரவதை செய்யப்படக்கூடாது என்பது நாட்டின் அரசமைப்பில் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமை. அந்த உரிமையே அரசமைப்பினதும் சட்டத்தினதும் காவலர்களான பொலிஸாரால் மீறப்பட்டிருக்கிறது. அத்தோடு ஒரு கிரிமினல் குற்றமான — வன்முறை — சித்திரவதை இடம்பெற்றிருக்கிறது. அது நாட்டின் மிக உயர்ந்த — உச்ச — நீதிமன்றத்தில் நிருபிக்கப்பட்டு அந்த நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுமுள்ளது.

ஆனால் நிவாரணம் வெறும் ரூபாக்களில் செலுத்தப்படும் நஷ்டஈடுதான். கிரிமினல் குற்றத்தை இழைத்தவர்கள் — அதுவும் பொலிஸார் — மீது எத்தகைய குற்றவியல் நடவடிக்கையும் இல்லை. அவர்கள் இழைத்த கிரிமினல் குற்றத்துக்கு அரசு நஷ்டஈடு — சிவில் வழக்குகளில் வழங்குவது போன்று வெறும் நஷ்டஈடு — வழங்கினால் போதும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் நிலை இங்கு.

சட்டத்தில் — நீதித்துறையில் — இத்தகைய ஓட்டைகள் இருக்கும்போது அரச இயந்திரங்களால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை — அடிப்படை உரிமை மீறல்களை — கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது. திறந்துவிட்ட மந்தைகள் போல அவை பரவுமே தவிர, தடுத்து நிறுத்தவே முடியாது.

வடக்குக் கிழக்கில் முகாமுக்கு முகாம் — காவல் நிலையத்துக்குக் காவல் நிலையம் — சித்திரவதைக் கூடங்கள் உள்ளன; இயங்குகின்றன. ஆனால் எமது சட்டங்களும், அவற்றைக் கையாளும் அதிகாரிகளும், சித்திரவதை போன்ற அத்துமீறல்களில் ஈடுபடுவோரைத் தண்டித்து அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஓர்மம் இல்லாத அரசியல் தலைமைத்துவமும் இந்த சித்திரவதைக் கூடங்களுக்குப் பாதுகாப்புக் கவசங்களாக இருக்கும் வரை இவற்றை ஒழிக்க முடியாது.

ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு போன்ற சர்வதேச அமைப்புகள் இது விடயத்தில் அரசுக்குத் தெரிவிக்கும் யோசனைகள் வெறும் "செவிடன்காதில் ஊதிய சங்கு"ஆகவேதான் முடியும் என்பதில் சந்தேகமில்லை.

ய

### இடம் பெயர்ந்திருக்கும்

# வலிகாமம் வடக்குப் பகுதி மக்களை வேறுஇடங்களில்குடியமர்த்துவதா?

## ஆட்சேபிக்கின்றார் காங்கிரஸ் கட்சித் தலைவர்

கொழும்பு, பெப். 26

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை வேறு இடங்களில் நிரந்தரமாக மீளக்குடியமர்த்த எடுக்கப்படும் முயற்சிகளை உடன் நிறுத்தி, அவர்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர ஏற்பாடு செய்யுங்கள்.

மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள 'பக்ஸ்' செய்தியிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலி – வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களை வேறு இடங்களில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிகிறேன்.

அந்த மக்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமரவே விரும்புகிறார்கள். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அந்த மக்கள் தமது சொந்த நிலத்தில், சொந்த வீட்டில் மீளக்குடியமர மறுப்பது அவர்களின் அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாகும்.

அவர்கள் தமது வீடுகளில் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்படுவதை எனது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

வலிகாமம் வடக்கில் அந்த மக்கள் மீளக்குடியமர ஏற்பாடு செய்யவேண்டும்.

அந்த மக்களை வேறு இடங்களில் மீளக் குடியமர முயற்சி மேற்கொள்ளப்பட்டால், அதை ஆட்சேபித்து பெரும் எதிர்ப்புக் கிளம்பும்— என்றுள்ளது.

இதேபோன்ற 'பக்ஸ்' செய்தி ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார். (உ–3)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல்1.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி சி. விஸ்வலிங்கம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ. சண்முகரட்ணம், தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக க. நடராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ—5)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 26

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணவித்தியாசாலைஇல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் இ. சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் பதில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் க. சுப்பிரமணியம், டாக்டர் யோ. தர்மேந்திரா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர்களான த. அழகரத்தினம், வை. சின்னத்தம்பி, கிராம அலுவலர் எஸ். சூரியகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ—5)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 26

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் அருட்செல்வி ஜெயசீலி றொட்றிக்கோ தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கு நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் க. அரசரட்ணம் பிரதம விருந்தினராகவும், நெடுந்தீவு பங்குத் தந்தை வண. லூயிஸ் மொன்பேட் கௌரவ விருந்தினராகவும் —

நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம், பல நோ. கூ. சங்கத் தலைவர் நா. சங்கரப்பிள்ளை, ஈ.பி.டி.பி பொறுப்பாளர் கே. மோகன், திருக்குடும்பக்கன்னியர் மடத் தலைவி அருட்சகோதரி பெனடிற்றா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கல்லூரியின் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர் ஐயாத்துரை தயாபரன் போட்டிகளை நெறிப்படுத்துவார். (ஐ-7)

★ ★ ★

குருநகர், பெப். 26

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் சு. சண்முகரட்ணம் பிரதம விருந்தினராகவும், யாழ். கல்வி வலயக் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-51)

★ ★ ★

சண்டிலிப்பாய், பெப். 26

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் நா. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வி ஏ.ஜோன்சனும், வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதனும் கலந்து கொள்வார்கள்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் வி. பாலசிங்கமும், கௌரவ விருந்தினராக பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் சு. வைரநாதனும் கலந்து கொள்வர். (ஐ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 26

புத்தூர் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் நா. சிவஞானம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரமும், சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கமும், கௌரவவிருந்தினர்களாக அரச கணக்காய்வு அத்தியட்சகர் பெ. தம்பிராஜா, த. தயாளன், கா. கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ – 5)

## நாளை

மாசி 15

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தி

மாலை 6-21 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பிற்பகல் 12-31 வரை.

சதுர்த்தி விரதம்

அமிர்தநேரம்: 10.59—12.29

இராகுகாலம்: 3 29— 4.59

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மேல் நீதிமன்ற அமர்வு

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்.-மாவட்ட மேல்நீதிமன்ற அமர்வு இன்று காலை 9 30 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

இந்த அமர்வினை நடத்துவதற்காக மேல்நீதிமன்ற நீதிபதி கே. பி. எஸ். வரதராஜா கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். (5)

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், பெப். 26

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வள அணி உதவியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் இன்றும் நாளையும் இருநாள்கள் நடைபெறவுள்ளது.

பி. ஜே. பர்னான்டோ ஸ்தாபனத்தின் ஆதரவில் மூ. வேதாபரணம் தலைமையில் கரவெட்டி விக்கினேஸ்வரா மைதானத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி முகாமில் பிரதம விருந்தினர்களாக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி. செல்வரட்ணம், பி. ஜே. பர்னான்டோ உரிமையாளர் திரு. திருமதி லயன் ஏ. ஜெயக்குமாரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தினமும் காலை 7 மணி தொடக்கம் மாலை 5 30 மணிவரை இந்தப் பயிற்சி முகாம் நடைபெறும். (3-15)

## சகலரும் ஒன்று சேர்ந்து சமாதானத்துக்காய்உழைப்போம்!

### அமைச்சர் பேரியல் அஷ்ரப் அழைப்பு

கொழும்பு, பெப். 26

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய காலம் வந்துவிட்டது. எனவே அனைவரும் ஒன்று சேர்ந்து சமாதானத்துக்காகப் பாடுபடுவோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப்.

இராணுவத்தினரின் பிள்ளைகளுக்குப் பரிசில் வழங்கும் வகையில் நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் யுத்தத்தை வெறுக்கின்றனர். எனினும் பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. எனவே சமாதானத்துக்காக அனைவரும் ஒன்றுசேர்ந்து செயற்படுவதுடன், தத்தமது இனத்துக்குரிய அடையாளங்களையும் பேணிக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார். (ஐ-7)

### யாழ். மாநகரசபையில்

## ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானங்களை அமுல் செய்க!

### புளொட் தரப்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ் மாநகரசபை மாதாந்த கூட்டங்களில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாளை நடைபெறும் மாநகர சபைக் கூட்டத்தில் தமது உறுப்பினர்களினால் வேண்டுகோள் விடுக்கப்படும் என்று 'புளொட்' அமைப்பு தெரிவித்துள்ளது.

★ தந்தை செல்வா நினைவுஸ்தூபி உள்ளடக்கிய பிரதேசத்தைத் தந்தை செல்வா சதுக்கம் எனப்பெயரிடல்.

★ துரையப்பா விளையாட்டரங்கில் உடற் பயிற்சிசெய்வதற்கான சாதனங்களை அமைத்தல்.

★ மாநகர சபைக்கு இலட்சினை வாசகம் பொறித்தல்.

★ மாநகர சபையினால் கணனிப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்தல்.

இந்த நான்கு தீர்மானங்களே நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கின்றன என்று புளொட் அமைப்பு இது தொடர்பாக வெளியிட்ட பத்திரிகைக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### உதயவாக்கு

நன்மை செய்வதால் ஏற்படும் இன்பம் என்றும் தேய்ந்து போகாது.

## உதைபந்தாட்டம்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு.

★ நல்லூர் சீக்செக்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக் கழகம்.

★ கல்வியங்காடு விநாயகர் விளையாட்டுக்கழகம் எதிர் நல்லூர் நொதேன் விளையாட்டுக்கழகம்.

★ பொற்பதி ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் வளர்பிறை விளையாட்டுக்கழகம்.

# நாட்டில் இனப்பிரச்சினை இல்லை; பயங்கரவாதப் பிரச்சினையே!

## ஐரோப்பியக் குழுவிடம் மகாநாயக்கர்கள் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 26

இலங்கையில் நடைபெற்று வருவது இனப்பிரச்சினையல்ல. இது பயங்கரவாதப் பிரச்சினையாகும். பயங்கரவாதத்தினை யுத்தத்தின் மூலமாகவே அழிக்க வேண்டும்.

இவ்வாறு தம்மைச் சந்தித்துப் பேசிய ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றக் குழுவினரிடம் மல்வத்தை அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் தெரிவித்தனர்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் வெள்ளிக்கிழமை மாலை கண்டிக்கு விஜயம் செய்து மல்வத்தைப் பீட மகாநாயக்கர் ரம்புக்வெல விபக்சி தேரரையும், அஸ்கிரியபீட மகாநாயக்கர் உடுகம ரட்ணபால் புத்தரத்ன தேரரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் இவர்கள் பௌத்த ஆலயங்களையும் தாக்கியுள்ளனர், பௌத்த பிக்குகளைக் கொலைசெய்துள்ளனர். அத்துடன் அப்பாவிச் சிங்கள மக்களைப் படுகொலைசெய்தும் வருகின்றனர். இந்த நிலையில் பயங்கரவாத அமைப்புடன் பேச்சுவார்த்தை தேவையற்றது என்றும் மகாநாயக்க தேரர்கள் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இலங்கையில் நடைபெற்று வருவது உள்நாட்டுப் பிரச்சினையாகும். இதில் வெளிநாடுகளின் தலையீடுகள் தேவையற்றது என்றும் மகாநாயக்க தேரர்கள் ஐரோப்பிய குழுவினரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் ஒருபோதும் சமாதானத் தீர்வுக்கு இணங்கப் போவதில்லை; தற்போது யுத்தநிறுத்தம் மேற்கொண்டுள்ளமையும் அவர்கள் பலவீனமடைந்தமையாலேயே என்றும் தேரர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். (ஐ)

## வீதி திருத்தம்

குருநகர், பெப். 26

நல்லூர் கோயில் வீதிக்கும் கச்சேரி நல்லூர் வீதிக்கும் இடையில் மோசமாகச் சேதமடைந்து காணப்படும் நாவலர் வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகிறது

(க — 51)

## பொது நிலையாளர்க்கான திருமறைக் கல்வி
## Bible Study For Lay People

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினால் பொது நிலையாளர்க்கான திருமறைக் கல்வித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாதம் ஒரு தடவை மொத்தம் 12 வகுப்புகளிலும் பயின்றவர்களுக்கு இறுதியில் சான்றிதழ்கள் கல்லூரியினால் வழங்கப்படும். இக் கல்வித் திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் திருச்சபைக் குரு மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

அனுப்பப்படும் உங்கள் விண்ணப்பங்களில் உங்கள் முழுப் பெயர், விலாசம் என்பவற்றை தவறாது குறிப்பிடுங்கள் அத்துடன் பங்குனி மாத இறுதிக்குள் உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

அனுப்பப்பட வேண்டிய முகவரி:
கல்லூரி முதல்வர்,
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம், சுன்னாகம்.

(84464)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



### அமரர் அம்பலவாணர் இராசதுரை
B. A. (LOND)

(முன்னாள் D.R O - திருகோணமலை, இளைப்பாறிய ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி)

மண்ணில் 20 – 08 – 1917
விண்ணில் 26 – 02 – 2000

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்பு முகம் என்றும் எம்மை விட்டுப் பிரியாது.

அன்பு மனைவி, மகன்,
மருமகன், பேர்த்தி.

இல. 880, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.
யாழ்ப்பாணம்.

(84506)

## சைக்கிள் இலக்கத் தகடு விநியோகம்

சண்டிலிப்பாய், பெப். 26

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் சைக்கிள்கள், வண்டில்கள், வளர்ப்பு நாய் ஆகியவற்றுக்கு இவ் வருடத்திற்கான இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சைக்கிளுக்கு ஐந்து ரூபாவும், வண்டிலுக்கு 20 ரூபாவும், நாய்க்கு 10 ரூபாவும் செலுத்தி இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று உப அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-185)

## கந்தபுராணப் படிப்பு

புன்னாலைக்கட்டுவன், பெப். 26

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அருள்மிகு சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் கந்தபுராணப் படிப்பு இடம்பெற்று வருகின்றது.

கடந்த தைப்பூசத் தினத்தன்று ஆரம்பமான படிப்பு மூன்று மாதங்கள் தொடர்ந்து இடம்பெறும். இன்று திங்கட்கிழமை 'வள்ளி திருமணம்' படலம் ஆரம்பமாகும்.

(ஐ-133)

## மாதாந்த உதவிப்பணம்

நவாலி, பெப். 26

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய் தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் பெப்ரவரி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-133)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

காரைநகர், பெப். 26

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

(ஐ-73)

### வசூல் கட்டண அறிவிப்பில் குளறுபடி:
## பளையில் வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் ஆச்சரியம்!

தென்மராட்சி, பெப். 26

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பளைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட குறைந்த வருமானமுடையோருக்கான வீடமைப்புத் திட்டப் பயனாளிகளுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கிவிட்டு 20 ஆயிரம் ரூபாவுக்கான கடனுக்குரிய கட்டுப்பணத்தைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

இது குறித்து தெரியவருவதாவது:-

வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு 20 ஆயிரம் ரூபா கடனாகவும் 10 ஆயிரம் ரூபா மானியமாகவும் மொத்தம் 30 ஆயிரம் ரூபாவுக்கு வீடு அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு கட்டங்களில் 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

மிகுதி 15 ஆயிரம் ரூபாவுக்கான வவுச்சரில் கையொப்பமிடப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு ஒரு வருடமாகியும் இதுவரை மிகுதித் தொகை கிடைக்கவில்லை.

ஆனால் கடன் தொகையான ரூபா 20 ஆயிரத்திற்குமான மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

(க—117)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை
திருமதி பரமேஸ்வரநாயகி கணபதிப்பிள்ளை
அவர்களின் அன்புத் தந்தையார்

### இராமலிங்கம் வேலுப்பிள்ளை
(ஓய்வு பெற்ற அதிபர்)

27—01—2001 இல் இறையடி சேர்ந்தார்.

அன்னாரது 31 ஆம் நாள் நினைவு 26—02—2001 இன்றாகும். அவர்களின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

(84633)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அதிபர் இராமலிங்கம் வேலுப்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.)

மலர்வு 1916-06-02
உதிர்வு 2001-01-27

தன்னலம் கருதாத் தந்தை,
தண்ணொளி வீசும் உள்ளம்
பொன்மொழி பேசும் எம் முன்
புவி உளோர் புகழும் தந்தை.

கடந்த 27—01—2001 சனிக்கிழமை இறைபதமெய்திய எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [26—02—2001] திங்கட்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையில் காலை 6.30 (மு.நே) மணிக்கும் வீட்டுக்கிரியைகள் எமது இல்லத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடரும் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

திரு. வே. குமரகுருபரசுந்தரம்,
இல. 223,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(84635)

## கல்விச்சாலைக் காட்சிகள்



வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி பவளவிழா சிறப்பு நிகழ்ச்சியாக கல்லூரி ஸ்தாபகர் அமரர் எம்.எஸ்.இராசரத்தினத்தின் உருவப்படம் கல்லூரி மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பதையும் அருகில் அதிபர் வி.சிவஞானபோதனையும் படத்தில் காணலாம். (ஐ-175)



யாழ்.மத்திய கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் முன்னாள் அதிபர் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குகின்றார். அருகில் கல்லூரியின் உப அதிபர் ஓங்காரமூர்த்தி காணப்படுகின்றார். (க-5)



திருநெல்வேலி சிவன் கோவிலடி சிவசக்தி பாலர் பாடசாலையின் வருடாந்தக் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் காவடி ஆட்ட நிகழ்வில் மாணவர்கள் பங்கு கொண்ட போது எடுக்கப் பட்ட படம் இது. (ஐ-7)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரா நந்தன் உரையாற்றுவதை இங்கு காணலாம். சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன், வலிகாமம் கல்வி வலய கட்டட பரிசோதகர் ஆ.நாகேந்திரா ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ-86)

# தகவல் தொழில்நுட்பப் பூங்கா கல்வி உலகுக்கு வரப்பிரசாதம்!

## ஆரம்ப வைபவத்தில் துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள தகவல் தொழில் நுட்பப் பூங்கா தமிழ்க் கல்வி உலகுக்கு பெரிய வரப்பிரசாதமாகும் - என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சினால் யாழ்ப் பாணம் ஸ்ரான்லி வீதியில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப பூங்காவின் ஆரம்ப வைபவத்திலே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன் ஆகியோர் இப்பூங் காவை சம்பிரதாய பூர்வமாக ஆரம் பித்து வைத்தனர். அந்த வைபவத் தில் துணைவேந்தர் மேலும் கூறிய தாவது:-

தகவல் தொழில் நுட்ப பூங்கா ஆரம்பித்து வைக்கப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறு வனம் உட்பட யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி நிறுவனங்களும் இதனைப் பயன்படுத்த வேண்டும். யாழ்ப்பாணத் தின் எதிர்காலம் அறிவுசார் பொரு ளாதாரத்தில் தங்கியுள்ளது. அதற்கு அத்திவாரம் இந்த தொழில நுட்ப பூங்கா மூலம் இடப்பட்டுள்ளது - என்று கூறினார்.

### அமைச்சர் தேவானந்தா

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது கூறியதாவது:-

எங்களுக்கு கிடைக்கின்ற எந்தச சந்தர்ப்பத்தையும் தமிழினத்தின் விடிவுக்காக-முன்னேற்றத்துக்காக- பயன்படுத்த வேண்டும் என்ற நோக் கத்துடனே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். கடந்த காலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி இருந்தால் இன்று எமது இனத்துக்கு இந்த நிலை வந்திருக்க மாட்டாது.

'செய்யும் தொழிலே தெய்வம்', 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற நோக்கத்துடன் நாம் செயற்பட்டு வருகின்றோம்-என்று அவர் கூறினார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப பினர் எஸ்.சிவதாசன் உரையாற்றும் போது கூறியதாவது:-

எமது மக்களுக்கு உதவ வேண டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் நாங்கள் அமைச்சுப் பதவியைப் பொறுப்பெடுத்துள்ளோம்.

எமது நோக்கம், இலக்குகளுக்கு தடைகள் ஏற்படுமாக இருந்தால் அமைச்சுப் பதவியைத் தூக்கி எறியத் தயங்கமாட்டோம்.

மக்களின் முன்னேற்றத்துக்கு எமது அமைச்சு ஊடாக எடுத்து வரும் முயற்சிகளைப் பொறுக்க முடியாத சிலர் குரைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

அவர்களால் குரைக்கத்தான் முடியும் கடிக்க முடியாது. நாம் அஞ்சப் போவதில்லை. எமது மக் கள் பணி தொடர்ந்து கொண்டேயி ருக்கும்.

தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஓர் ஆரம்பமே. தொடர்ந்தும் இது போன்ற பணிகளை எமது அமைச்சு முன்னெடுத்துக் கொண்டேயிருக்கும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் - என்று கூறினார்.

யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முக நாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) ஆகியோ ரும் உரையாற்றினார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப் பாணம் நாக விகாரையைச் சேர்ந்த ஸ்ரீசுமங்கள ஞானரத்ன தேரர், பெரிய கடை ஜும்மா பள்ளிவாசல் மௌலவி மொனகதீன் ஆகிய மதத் தலைவர் களும் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கினர். (ஐ-5)

# மக்கள் முண்டியடிப்பு

தென்மராட்சி,பெப்.26

சாவகச்சேரி, மட்டுவில் ஆகிய பகுதிகளில் உள்ள தமது வீடுகளைப பார்வையிடுவதற்கு உரிய விண்ணப் பங்களுடன் பெரும் எண்ணிக்கையான மக்கள் கொடிகாமத்திலுள்ள சிவில் அலுவல்கள் அலுவலகத்திற்கு தின மும் சென்று வருவதைக் காண முடி கிறது.

படிவங்கள் கையளிப்பதற்காக பெரும் எண்ணிக்கையில் மக்கள் செல்வதால் அங்கு ஏற்படும் நெருக் கடி காரணமாக பலர் திருப்பி அனுப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

கட்டாக்காலி நாய்களை அழிப் பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப படவுள்ளதால், வளர்ப்பு நாய்களை கட்டிவைத்திருக்குமாறும் அவற்றுக் குரிய அனுமதி இலக்கத்தகட்டினை பிரதேச சபை உப அலுவலகங்க ளில் பெற்றுக் கொள்ளுமாறும் நல் லூர் பிரதேச சபை அறிவித்துள் ளது. (க)

# 'பெற்றோ மக்ஸ்' வெடித்து தந்தையும் மகளும் காயம்

ஒளி ஊட்டிய 'பெற்றோ மக்ஸ்' லாம்பை கம்பி ஒன்றில் தொங்கவிடப் பட்ட போது அது தவறி வீழ்ந்து வெடித்ததில் தந்தையும், மகளும் தீக் காயங்களுக்கு இலக்கானார்கள்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் வல்வெட்டித் துறை இலந்தைக் காட்டில் இடம்பெற் றது.

இதே இடத்தைச் சேர்ந்த பொ. யோகராசா (வயது 45) அவரது மக ளான, யோ.சரோஜா (வயது 17) ஆகிய இருவரும்; கால்களிலும்; முதுகுப் பகு திகளிலும் எரிகாயங்களுக்கு உள் ளாகி மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டள்ளனர். (க-109)

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடு நடத்த அனுமதிக்குக!

## ஆலய மூப்பர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.26

அடுத்த மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கச்சைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப் பலியும், வழிபாடும் நடத்த அனுமதி பெற்றுத் தரும்படி ஈ.பி.டி.பி அமைப் பின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் மூப்பரும், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரு மான புலவர் ஏ.டபிள்யூ அரியநாயகம அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் 1982ஆம் ஆண்டு முதல் திருப்பலிப் பூசைகள் நடைபெற வில்லை என்றும் -

1988இல் இந்திய அமைதிப் படையின் அனுமதியுடன் ஒரு நாள் வழிபாடு நடத்தப்பட்டதாகவும் சுட் டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம் பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு திருப்பலிப் பூசைகளை நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார் என்றும் -

திருப்பலிப் பூசைகளில் பக்தர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக சுமா 100 பக்தர்களின் பெயர் விவரங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு

# அமைச்சு அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு அலுவல கம் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் அமைச்சர் டக்கள் தேவானந் தாவினால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.அரச அதிபர் மற்றும் திணைக் கள தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோர் இந்த நிகழ் வில் கலந்து கொண்டனர்.

அமைச்சு அலுவலகம் ஆரம்பிக் கப்பட்ட தினமே கைதடியில் மீளக் குடியமர்ந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பாகவும் அங்கு ஆராயப்பட்டது. (ம-7-15-173)

# விவசாய உற்பத்திகளை பதனிடும் தொழிற்சாலை

## சுன்னாகம் கூ.சங்கம் நிறுவும்

அரியாலை,பெப்.26

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுற வுச் சங்கம் பட்டினிக்கு எதிரான இயக்கத்தின் உதவியுடன் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் விவசாயப் பொருள்களைப் பதனிடும் தொழிற் சாலை ஒன்றை அமைக்கவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங் கத் தலைவர் சி.குமாரவேல் தெரிவித் தார்.

இந்தத் தொழிற்சாலை உடுவில் ஆலடிப் பகுதியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்படும்.

தொழிற்சாலையை நிறுவுவதற் கான நிதி உதவிகளை வழங்கு வதறகு பட்டினிக்கு எதிரான இயக்கம் முன்வந்துள்ளதாக சங்கத் தலைவர் மேலும் கூறினார். (ஐ-1?7)

# பதுளை தனியார் வங்கியில் பெரும் தொகைப் பணம் மோசடி

கொழும்பு,பெப்.25

பதுளையிலுள்ள பிரபல தனியார் வங்கிக் கிளையொன்றில் பண மோசடி இடம்பெற்றிருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

வங்கித் தலைமையகப் பரிசோ தகர்கள் இந்தக் கிளையில் நடத் திய திடீர் சோதனையொன்றில் இரண்டு கோடியே முப்பது இலட்சம் ரூபா மோசடி இடம்பெற்றிருப்பது தெரிய வந்துள்ளது. இதனையடுத்து வங் கிக் கிளையின் முகாமையாளர் தலை மறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. அவரது இடத்துக்கு நாளை முதல் நுவரெலியா கிளையின் பிரதி முகாமையாளர் தற்காலிகமாக நிய மிக்கப்படவுள்ளார். டொலரின் பெறு மதி கூடியதிலிருந்து கையாடப்பட்ட பணம், தொலை மடல், தொலைபேசி ஆகியவற்றின் மூலம் மேற்கொள் ளப்பட்ட பணக் கொடுப்பனவுகள், வங் கிக்கடன் கொடுப்பனவுகள் முதலிய வையூடாகவே மோசடிகள் இடம்பெற் றிருக்கின்றன எனத் தெரியவந்திருக் கிறது.

தலைமறைவாகியிருக்கும் முகா மையாளரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை வங்கித் தலைமை யக விசேட குழுவினர் முடுக்கிவிட் டுள்ளனர். (ஐ)

# University of Jaffna

## Tender Notice

The chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with (ICTAD) for Civil Engineering works or from Multi Purpose Co-operative Socities for the Repairs, addition/Improvements at Dept.of Bio-Chemistry, Faculty of Medicine, University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer (Civil). University of Jaffna until 14-03-2001 on producing Registration book and receipt for the cash payment for the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1.Refundable deposit Rs.5000/-
2.Non-refundable deposit Rs.500/-

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 20-03-2001 at 10.00 A.M.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance Branch of this University during office hours if necessary.

**Registrar,**
**University of Jaffna.**

*P.O. Box 57,*
*Thirunelvely,*
*Jaffna.*

(C/15446)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழு நடத்தும் 'ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்' என்னும் நான்கு நாள் பயிற்சிப் பட்டறை மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

முதலாம் திகதி தொடக்கம் 4ஆம திகதிவரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் குழந்தை ம.சண்முகலிங்கம், எஸ்ரஜீவன், அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை, ஐயா சச்சிதானந்தம், ஏ.எம்.தாஜ், மனிக்திவல, செல்வி வயலற் இம்மானுவல், எஸ்.நாகநந்தன், வி.பி.சிவநாதன் ஆகியோர் ஊடகத்துறை தொடர்பான விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (ஜ-5)


## அறைகள் வாடகைக்கு

இங்கே தங்கிப் படிப்பதற்கு சகல வசதிகளும் கொண்ட அறைகள் மாணவிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கப் படும்.

**"பொன் அகம்"**
தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

(84540)


ஓம் சக்தி

சுன்னாகம், வருஷப்புலம்

# அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவ விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

மங்களகரமான விக்கிரம வருஷம் மாசி மாதம் 15 ஆம் நாள் 27-02-2001 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

**06-03-2001 :-** செவ்வாய்க்கிழமை மாலை **2.30** மணி
திருவேட்டைச் சப்பறம்

**07-03-2001 :-** புதன்கிழமை காலை 9 மணி
தேர்த்திருவிழா

**08-03-2001 :-** வியாழக்கிழமை காலை 10 மணி
தீர்த்தோற்சவம்
மாலை 5 மணிக்கு கொடி இறக்கம்

- நிர்வாக சபையினர்.

விளம்பர அன்பளிப்பு :-
*மகாமாரி லைற், பந்தல் சேவையினர்*

(84598)


# மஸ்கெலியா தேயிலை

# MASKELIYA TEA

# சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் (CEYLON COLD STORES) ஸ்தாபனத்தின்

## மஸ்கெலியா மலைச்சாரலின் உன்னத தேயிலை

★ இலங்கையின் அதிமுன்னணி நிறுவனங்களை நிர்வகிக்கும் நிர்வாகத்தின் கீழ் பதினெட்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விளையும் அதி உன்னத தேயிலை!

★ மஸ்கெலியா தேயிலை என்றும் உன்னத தரத்துடன் உங்களுக்குக் கிடைக்கின்றது. மஸ்கெலியாவில் அமைந்துள்ள எமது வளம்மிக்க தேயிலைத் தோட்டங்களில் கொய்த இளம் தேயிலைத் துளிர்கள், சில மணி நேரத்துக்குள் எமது தொழிற்சாலையில் பொதி செய்யப்படுகின்றது. தரத்துக்கும், தூய்மைக்கும் உத்தரவாதமளிக்கப்பட்ட மஸ்கெலியா தேயிலை உங்களுக்கு என்றும் புதுத் தென்பு தரும்!

*எமது தோட்டத்தில் உற்பத்தியாகும் எமது தேயிலை*
100% தூய்மையானது
தரமானது!

➡ உயர் தரம்
➡ குறைந்த விலை
➡ **50g, 100g, 200g, 400g,** அளவு பைக்கெற்றுக்களில்
➡ உங்கள் அருகிலுள்ள கடைகளில் கிடைக்கும்.

தயாரிப்பு: மஸ்கெலியா பிளாண்டேசன்ஸ்
**(MASKELIYA PLANTATIONS)**

# ESWARA BAGAWAAN & COMPANY

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**
**No.100, Hospital Road, Jaffna.**
**T.P. 23575**

(84545)


# சேவை நலன் பாராட்டு



**திரு.செல்லையா துரைராசா**

*(கனிஷ்ட அதிபர், யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)*


எமது கல்லூரியின் கனிஷ்ட அதிபராக இருந்து 25.02.2001 ஞாயிற்றுக் கிழமை அன்று தமது அறுபதாம் அகவையை நிறைவு செய்ததுடன் முப்பத்தெட்டு வருட கால ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்யும் கனிஷ்ட அதிபரை சகல நலன்களும் பெற்றுப் பல்லாண்டுகள் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

*யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,*
*சண்டிலிப்பாய்.*

(84563)

# 31 ஆம் நாள் நினைவு கூரல்



**அமரர் க.மகாதேவா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07.06.1935 | 27.01.2001 |
| நாவலடி ஞானவைரவர் கோயிலடி, ஆறுகால்மடம். | G.P.S. வீதி, கல்வியங்காடு. |

உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நா.சுகந்தரலிங்கம் குடும்பம்,
சகோதரன் (இறங்கசிவம்)
புது வீதி, கள்ளப்புறாவயல்,
ஆறுகால்மடம்.
ந.வைகுந்தநாதன் தமிழ்ச்செல்வி,
422, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
சு.இரவீந்திரன் கலைச்செல்வி,
சுவிஸ்.

க.புஸ்பராசமணி (சகோதரி) குடும்பம்,
இந்தியா
சு.சரஸ்வதி (கிளி அக்கா) குடும்பம்,
கொழும்பு (கட்டைப்பிராய்)
சி.பரிமளகாந்தன் குடும்பம்,
422, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
செ.சத்தியசீலன் குடும்பம்,
விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு.

*G.P.S. வீதி, கல்வியங்காடு.*

(84627)

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தலையிட்டு ராணுவ முஸ்தீபுகளை தடுக்க வேண்டும்

## மன்னார் ஆயர் வேண்டுகோள்

கொழும்பு,பெப்.26

விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிக்கு நல்லெண்ணமாக யுத்த நிறுத்தத்தினை தொடர்ந்தும் நீடித்து வரும் சூழ்நிலையில் படையினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் ஐரோப்பிய யூனியன் மேற்கொள்ள வேண்டும் - என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத் தூதுக் குழுவிடம் மன்னார் ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை கோரியுள்ளார்.

அமெரிக்கா, இந்தியா உட்பட ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தி இணக்கப்பாடு ஒன்றினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் ஆயர் கேட்டுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் நல்லெண்ண முயற்சி குறித்தும் ஆயர் இராயப்பு யோசப்பினால் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுக்கு கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை தமது பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர். கத்தோலிக்க மக்களும் அதனையே விரும்புகின்றனர்.

அரசாங்கம் தமிழ் மக்களை ஓரம் கட்டி அழித்தொழிக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றது. இனப் பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தாது அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்யுமானால் அது பேரழிவைத்தான் ஏற்படுத்தும்.

விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு நல்லெண்ணத்தைக் காட்டி வரும் இந்தச் சந்தர்ப்பத்தினை அரசாங்கம் தவறவிடக்கூடாது.

### தமிழ்க் கட்சிகளும் புலிகளை ஆதரிக்கின்றன

தமிழ் அரசியல் கட்சியினரும் விடுதலைப் புலிகளை ஆதரித்து வருகின்றனர். தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் எம்மைச் சந்தித்தபோது விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொண்டால் தான் அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொள்வேன் என்று தெரிவித்திருந்தார்.

விடுதலைப்புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் எனவும் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வொன்றினைக் காண்பதையே தாம விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர். நானும், யாழ்.ஆயரும் கடந்த 7ஆம் திகதி புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை வன்னியில் சந்தித்தபோது இதனை அவர் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் தமிழ் மக்களை ஓரம் கட்டவே முயற்சி எடுத்து வருகின்றது. பெரும்பான்மை இன அரசுகள் தமிழ் மக்களை ஒடுக்க முற்பட்டதே இனப்பிரச்சினைக்கு காரணமாகும்.

தற்போது அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றால் தமிழர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். தமிழ் மக்களின் உரிமையைத் தட்டிக்கழித்து பிரிட்டனின் உதவியோடு அங்கு புலிகளை ஓரம் கட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றது. விடுதலைப் புலிகளின் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தினை அரசாங்கம் கொச்சைப்படுத்தி வருவதுடன் இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

### புலிகளின் பலத்தை குறைத்து மதிப்பிடுகின்றது

அரசாங்கம் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தினை மேற்கொண்டுள்ளமையினால் அவர்கள் பலம் இழந்துள்ளதாகக் கருதுகின்றது. ஆனால் அரசு பல தடவைகள் அனுபவப்பட்டும் இன்னமும் பாடம் கற்கவில்லை.

எனவே ஐரோப்பிய யூனியன் நிரந்தர சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்த உதவி புரிய வேண்டும்.

### நிபந்தனையுடன் நிதி வழங்க வேண்டும்

இலங்கை அரசுக்கு நிதி உதவி வழங்கும்போது சமாதானத்தை ஏற்படுத்தத்தக்க நிபந்தனையுடன் நிதி உதவி வழங்கப்பட வேண்டும். நோர்வே அரசின் வழிகாட்டலில் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட அழுத்தம் கொடுக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தினை ஏற்று அரசாங்கமும் யுத்த நிறுத்தத்தினை மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய நடவடிக்கையினையும் தாங்கள் எடுக்க வேண்டும் - என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதிவண கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஒரு தொகுதி விரிவுரைக் கதிரைகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் ஆயருடன் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், மாணவ முதல்வர், உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் காணப்படுகின்றனர். (ஐ)

### தபசு காலம் புதனன்று ஆரம்பம்

குருநகர்,பெப்.26

எதிர்வரும் 28ஆம் திகதி புதன் கிழமை விபூதிப் புதனாகும். கிறிஸ்தவர்களின் தபசு காலம் அன்றிலிருந்து ஆரம்பமாகவுள்ளது. அன்றையதினம் தேவாலயங்களில் விசேட வழிபாடு நடைபெறவுள்ளது. (ஐ-51)



சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொழும்பிலிருந்து தருவித்த லொறி அடிச் சட்டத்திற்கு உடற்கோப்பு அமைக்கப்பட்டு அதனைச் சேவையில் ஈடுபடுத்தும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் கரவெட்டி அத்துளு அம்பாள் ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் பொது முகாமையாளர் சி.தேவகுமார், லொறி உடற்கோப்பு அமைப்பாளர் வ.இராசநாயகம் உட்பட சங்க நெறியாளர்கள் புதிய லொறியுடன் காணப்படுகின்றனர்.

*(படம்:- தென்மராட்சிச் செய்தியாளர்)*

# திருமலை ஆஸ்பத்திரியை தரமுயர்த்த வேண்டும்

## வல்வை நகர சபையில் தீர்மானம்

வடமராட்சி,பெப்.26

தமிழர் தலைநகரான திருகோணமலையில் உள்ள அரசினர் ஆதார வைத்தியசாலையை பொதுவைத்தியசாலையாக தாமதமின்றி தரம் உயர்த்த வேண்டும். காலக் கிரமத்தில் இவ் வைத்தியசாலையை போதனா வைத்தியாலையாகவும் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

இவ்வாறு வல்வெட்டித்துறை நகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

சபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

☆ வடமராட்சிப் பிரதேசத்தில் வடம ராட்சி மேற்கு என்ற பெயரில் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக புதிய பிரதேச செயலர் பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

☆ தற்போது உள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர அலுவலகத்தை பிரதேச செயலகமாக தரம் உயர்த்துவதுடன், வடமராட்சி கிழக்குப் பகுதிக்கென தனியான பிரதேச சபை ஒன்றும் அமைகக்கப்பட வேண்டும்.

☆ வடமராட்சி மக்களின் வசதி கருதி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையை பொதுவைத்தியசாலையாகவும், வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாகவும் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

தீர்மானங்களின் பிரதிகள் சம்பந்தப்பட்ட அமைச்சர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிராந்திய திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. (க-173)

### கசிப்பை மீட்டு நிலத்தில் ஊற்றிய இளைஞர்கள்!

நெல்லியடி,பெப்.26

கசிப்பு உற்பத்தி, விற்பனையில ஈடுபட்டு வந்த இரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அப்பகுதி இளைஞர்களின் திடீர் நடவடிக்கையின்போது சிக்கினார்கள். பெருமளவு கசிப்பு அவர்களினால் மீட்கப்பட்டு நிலத்தில் ஊற்றப்பட்டது.

இச்சம்பவம் கடந்த வெள்ளி இரவு, திக்கம்வடிச்சாலைக்கு அருகில் உள்ள இரு கிராமங்களில் இடம் பெற்றன.

இப்பகுதியில் கசிப்பு விற்பனையும், உற்பத்தியும் அதிகரித்து வந்ததையடுத்தே, இளைஞர்கள் இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டனர். இவர்களின் முன்மாதிரியை அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். (க-109)

# வைதிகக் கிரியைகளை அந்தணர்கள் சுருக்கமாகச் செய்வது வருந்தத்தக்கது

## நூல் வெளியீட்டு விழாவில் குருக்கள் கவலை

வலிகாமம் தெற்கு,பெப்.26

"சந்தியா வந்தனம், சிவபூசை போன்றன உரிய முறைப்படி அந்தணர்களால் தினமும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு காலத்தில் சிறந்த முறையில் இவற்றைச் செய்து வந்த பிராமணர்கள் இப்போது அவற்றை மிகச் சுருக்கமாகச செய்து வருகின்றனர். இவற்றை அழிந்து விடாமல் நாம் பேண வேண்டும். வைதிகம் பிராமணர்களுக்கு என்று முனிவர்களால் தரப்பட்ட தனிச் சொத்து. வைதிக கிரியைகள் பல இன்று கைவிடப்பட்டு - மறக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் யாழ்ப்பாணத்தில் வைதிக விடயங்களை அபிவிருத்தி செய்வதற்கு சிலரால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சி மன நிறைவைத் தருகின்றது".

சுன்னாகம் - மயிலணி சிவன் கோயில் மண்டபத்தில் இடம்பெற்ற 'சந்தியா வந்தனம்', 'ஆதமார்த்த சிவ பூசை' நூல்களின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வர ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் விழா நடைபெற்றது.

நூல்களின் அறிமுக உரையினை இளைப்பாறிய அதிபர் பிரம்ம ஸ்ரீ சி. சிவ சரவணபவ சர்மா (சிற்பி) நிகழ்த்தினார்.

அவர் தனது அறிமுக உரையில் கூறியதாவது:-

அந்தணர்கள் தமக்குரிய ஒழுக்க வழி நின்று வாழ்ந்தால் தான் அகில உலகமும் சிறப்புடன் வாழும். அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள் அந்தணர்கள். உபநயனத்தின் பின்னர் மூன்று வேளையும் சந்தியா வந்தனத்தை செய்ய வேண்டும்.

ஏனைய சமயங்களில் குருமார்கள் எப்படி நடக்கிறார்கள் என்பதைக கண்காணிக்க சில நிறுவனங்கள் உள்ளன. அத்தகைய ஒரு நிலை இந்து சமயத்தில் காணப்படாதது தான் இந்து சமயத்துக்குப் பலம். அது தான் இந்து சமயத்தின் பலவீனமும் கூட. இந்து சமயத்தில் எமது மனசாட்சியே எம்மைக் கண் காணித்துக் கொள்கின்றது. நாம் சந்தியா வந்தனம், சிவபூசை பண்ணுகிறோமா என்பதை யாரும் கண்காணிப்பதில்லை அது எமது மனசாட்சியைப் பொறுத்தது. சந்தியா வந்தனம் சிவபூசை என்பவற்றின் தன்மைகளை அறிந்து உணர்ந்து செய்து வந்தால் நாங்களும் அநுபூதிமான்களாக மாறமுடியும் - என்றார்.

### தலைமையுரை

பேராசிரியர் கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் பல அந்தண நிறுவனங்கள் ஊடாக பல நூல்களை வெளியிட்டு வருகிறோம். சமஸ கிருத எழுத்தில் நூல்களை வெளியிடக்கூடிய வாய்ப்பு இன்றைய நவீன தொழில் நுட்ப வளர்ச்சியால் எமக்குக் கிடைத்துள்ளது. யாழ்.பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதத்தை பயில இன்று பலர் ஆர்வத்தோடு முன் வந்துள்ளனர். சமஸ்கிருதத்தை கட்டிக் காக்க வேண்டிய அந்தணர்கள் மற்றவர்கள் காட்டும் ஆர்வத்திற்கு சோடை போகாமல் கற்றுத் தெளிய முன் வர வேண்டும்.

சிவாச்சாரியார் பாரம்பரிய சிறந்த அந்தண பாரம்பரியம் என்பன நிலைக்க வேண்டும் என்பதற்காக பொன்னம்பலம், இராமநாதன் போன்ற பெரியார்கள் பல கோயில்களையும் கல்லூரிகளையும் நிறுவியுள்ளனர்.

இன்று வெளியிடப்படும் நூல்கள் போல பல நூல்களை காலந்தோறும் வெளியிடுவதன் மூலம் சிறந்த பாரம்பரியம் இங்கு பேணப்படும்.

பொன்னம்பலவாணேஸ்வரம் என்றவுடன் எமது நினைவில் வருபவர் சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள். அவர் வைதிக பாரம்பரியத்தை நம்மிடையே பேணிப் பாதுகாத்து வருகிறார். வைதிக கிரியை நுட்பங்களை ஏனையவர்களுடன் கலந்துரையாடி தெளிவுபடுத்தி வருகிறார். சிவாலயப் பணியுடன், அந்தணர்களுக்கான பல சேவைகள், சமயம் சார்ந்த சந்தேகங்களைப் போக்கி கல்வி வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வருகின்றார் - எனக் கூறினார்.

### நயப்புரை

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் நயப்புரை வழங்குகையில் - வைதிக கிரியைகளை வளர்ப்பதில் முன்னின்று உழைக்கும் குருக்களிடம் தான் நாங்கள் வைதிக சந்தேகங்களை நீக்குவதற்குச் செல்ல வேண்டும். வைதிகத்தில் சிறந்த ஞானம் உள்ளவர் குஞ்சிதபாதக் குருக்கள் என்று கூறினார்.

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சாம்ப சிவ சோமசபேசக் குருக்கள், சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்களுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவித்தார்.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருகள். 'வைதீஹ்ய வித்யா சாகரம்' என்ற பட்டத்தை குருக்களுக்கு வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நூலின் முதற்பிரதியை சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள் பெற்றுக் கொண்டார். (ஐ-152)

### கூ.சங்கப் பணியாளருக்கு நாளை விடுமுறை

அரியாலை,பெப்.26

யாழ்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் சகல பணியாளர்களுக்கும் நாளை செவ்வாய்க் கிழமை விடுமுறை தினமாகும். இதனால் சங்கத்தின் நிர்வாகப்பகுதி மற்றும் சங்கக் கிளைகள் யாவும் நாளை செயற்படமாட்டாது என்று சங்கத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

சுதந்திர தினம் இம்முறை ஞாயிற்றுக்கிழமை வந்ததால் அன்றைய விடுமுறை தினத்தை வழங்கும் முகமாகவே நாளை பணியாளர்களுக்கு விடுமுறை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம், உணவகம் என்பன நாளை வழமைபோல் திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

### நிவாரணம் வழங்க ஏற்பாடு

அரியாலை,பெப்.26

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெப்ரவரி மாதத்துக்கான இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்கும் பொருட்டு செயலக புனர்வாழ்வுப் பகுதியிடம் இருந்து நிவாரணத்துக்குரிய பொருள்களைப் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த, 40 வயது நிரம்பிய, அழகான படித்த பெண்ணுக்கு 47 வயதுக்குட்பட்ட விவாகமாகாத மணமகன் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நட்சத்திரம் சித்திரை 3ஆம் பாதம். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: **383/26,** நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (84622)

யாழ்.இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த 31 வயது நிரம்பிய, படித்த பெண்ணுக்கு 40 வயதுக்குட்பட்ட, விவாகமாகாத மணமகன் தேவை. உத்தியோகம், சொந்த வியாபாரம் விரும்பத்தக்கது. நட்சத்திரம் மிருகசீரிடம் 2ஆம் பாதம். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: **383/26,** நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (84623)

## தவறிவிட்டது

நடேசன் கோணேஸ்வரி என்பவருடைய வி.அ.அ. (இல.0903001369), தே.அ.அ. (இல.808211548V) என்பன புத்தூருக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் **D.M.I** ரியூசன் சென்ரரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (84625)

சின்னையா செல்வராணி என்பவருடைய தேசிய அடையாள அ. (இல. 465650478V) விசேட அ.(இல. 0907022095) என்பன மதவடிக்கும் சுன்னாகம் சந்தைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். 59, கே.கே.எஸ்.றோட், காயத்திரி அரைக்கும் ஆலை, சுன்னாகம். (84629)

## படிவங்கள்

தாதியர் பயிற்சி விண்ணப்பப் படிவம் (முடிவு திகதி 01.03.2001), க.பொ.த (உ.த) 2001 விண்ணப்பப்படிவம் (முடிவு திகதி 31.03.2001) விற்பனையாகின்றன. வர்த்தமானி பார்வைக்கு உண்டு. பாரதி, 430,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **(C/15431)**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

இலகு வேலை. முதியவர் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இலக்கம் 1224, மே/பா.உதயன். (84547)

## வீடு தேவையா?

சகல வசதிகளுடன் கூடிய சிறிய பகுதி **(SEPARATE ANNEX)** வீடு ஆறுகால்மடத்தடியில் இரு பெண்களுக்கு தாய், மகள்மார் தங்குவதற்கு இலவசமாக வழங்கப்படும். தொடர்பு: விள. இல. 1223, மே/பா. உதயன். (84542)

## இலக்கியக் கட்டுரைகள்

10-11ஆம் தரங்களில் தமிழ் இலகியத்தை இலகுவாகக் கற்கவும், கற்பிக்கவும் சிறந்த நூல். சிறு கதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியுள்ளார். அவை எல்லாவற்றையும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. (83570)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.26

வெளிமாவட்டங்களுக்குப் பயணம செய்ய விண்ணப்பித்தோரில் இம் மாதம் 23 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் இலங் கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| (170749ஏ) | (173337ஏ) | (173337பி) |
| (177973ஏ) | (177973பி) | (177974ஏ) |
| (180520ஏ) | (183665ஏ) | (183665பி) |

### கரவெட்டி

| | | |
|---|---|---|
| (135007ஏ) | (151425ஏ) | (151425பி) |
| (153897ஏ) | (155065ஏ) | (155654ஏ) |
| (158235ஏ) | (158235பி) | (159901ஏ) |
| (151901பி) | (151901சி) | (159901டி) |
| (164576ஏ) | (164576பி) | (164841ஏ) |
| (164841பி) | (165097ஏ) | (168163ஏ) |
| (169518ஏ) | (169518பி) | (169857ஏ) |
| (169857பி) | (169857சி) | (172271ஏ) |
| (172271பி) | (174518ஏ) | (176465ஏ) |
| (176465பி) | (177810ஏ) | (177810பி) |
| (177810சி) | (177810டி) | (177886ஏ) |
| (177891ஏ) | (177917ஏ) | (177917பி) |
| (177917சி) | (177917டி) | (177921ஏ) |
| (177921பி) | (177933ஏ) | (180386ஏ) |
| (180386பி) | (180387ஏ) | (180391ஏ) |
| (180391பி) | (180394ஏ) | (180394பி) |
| (180394சி) | (180414ஏ) | (180414பி) |
| (180414சி) | (180419ஏ) | (180419பி) |
| (180429ஏ) | (180429பி) | (180456ஏ) |
| (180456பி) | (180486ஏ) | (180607ஏ) |
| (181079ஏ) | (181081ஏ) | (181081பி) |
| (181081சி) | (181081டி) | (181324ஏ) |
| (182217ஏ) | (182217பி) | (182217சி) |
| (182217டி) | (182217ஈ) | (182232ஏ) |
| (182232பி) | (182232சி) | (182240ஏ) |
| (182256ஏ) | (182256பி) | (182257ஏ) |
| (182257பி) | (182343ஏ) | (182343பி) |
| (182389ஏ) | (182389பி) | (183528ஏ) |
| (183528பி) | (183532ஏ) | (183672ஏ) |
| (183673ஏ) | (183676ஏ) | (183676பி) |
| (183726ஏ) | (183726பி) | |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (154507ஏ) | (154507பி) | (154507சி) |
| (162932ஏ) | (162932பி) | (166991ஏ) |
| (166991பி) | (168255ஏ) | (168255பி) |
| (173366ஏ) | (173382ஏ) | (173383ஏ) |
| (173383பி) | (173390ஏ) | (173390பி) |
| (173393ஏ) | (173393பி) | (177210ஏ) |
| (177210பி) | (179538ஏ) | (179603ஏ) |
| (179637ஏ) | (179637பி) | (179668ஏ) |
| (179680ஏ) | (179755ஏ) | (179764ஏ) |
| (179764பி) | (179767ஏ) | (179767பி) |
| (179769ஏ) | (179769பி) | (179769சி) |
| (179778ஏ) | (180629ஏ) | (180629பி) |
| (180629சி) | (180629டி) | (180629ஈ) |
| (180630ஏ) | (180738ஏ) | (180738பி) |
| (180738சி) | (180738டி) | (180738ஈ) |
| (180738எவ்) | (180763ஏ) | (180763பி) |
| (180785ஏ) | (180787ஏ) | (180809ஏ) |
| (180892ஏ) | (180904ஏ) | (180908ஏ) |
| (180908பி) | (180908சி) | (180942ஏ) |
| (180942பி) | (180949ஏ) | (180949பி) |
| (180982ஏ) | (180982பி) | (180983ஏ) |
| (181017ஏ) | (181017பி) | (181017சி) |
| (181017டி) | (181017ஈ) | (181025ஏ) |
| (181031ஏ) | (182888ஏ) | (182888பி) |
| (182888சி) | (182900ஏ) | (182908ஏ) |
| (182929ஏ) | (182929பி) | (184027ஏ) |
| (184037ஏ) | (184043ஏ) | (184053ஏ) |
| (184053பி) | (184071ஏ) | (184075ஏ) |
| (184077ஏ) | (184090ஏ) | (184090பி) |

### மருதங்கேணி

| |
|---|
| (180535ஏ) |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (156888ஏ) | (167666ஏ) | (167666பி) |
| (167771ஏ) | (167771பி) | (170730ஏ) |
| (170730பி) | (170730சி) | (170730டி) |
| (170737ஏ) | (170905ஏ) | (170907ஏ) |
| (170919ஏ) | (170938ஏ) | (170939ஏ) |
| (170940ஏ) | (170941ஏ) | (170943ஏ) |
| (170944ஏ) | (170945ஏ) | (171311ஏ) |
| (171410ஏ) | (171411ஏ) | (171416ஏ) |
| (171420ஏ) | (171426ஏ) | (171437ஏ) |
| (171452ஏ) | (171457ஏ) | (171465ஏ) |
| (177174ஏ) | (177188ஏ) | (177195ஏ) |
| (177197ஏ) | (177197பி) | (177197சி) |
| (177198ஏ) | (177295ஏ) | (177295பி) |
| (179672ஏ) | (179704ஏ) | (179704பி) |
| (179704சி) | (179709ஏ) | (179711ஏ) |
| (179711பி) | (179719ஏ) | (179719பி) |
| (179719சி) | (179737ஏ) | (179737பி) |
| (179737சி) | (179758ஏ) | (179158பி) |
| (179758சி) | (184054ஏ) | |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (146784ஏ) | (146784பி) | (150916ஏ) |
| (150916பி) | (154940ஏ) | (155783ஏ) |
| (155783பி) | (155783சி) | (160055ஏ) |
| (160055பி) | (160227ஏ) | (164418ஏ) |
| (164418பி) | (164418சி) | (169503ஏ) |
| (169505ஏ) | (172336ஏ) | (172336பி) |
| (172336சி) | (172358ஏ) | (172358பி) |
| (174672ஏ) | (174672பி) | (174672சி) |
| (174686ஏ) | (174686பி) | (176130ஏ) |
| (176130பி) | (176334ஏ) | (177797ஏ) |
| (177806ஏ) | (177806பி) | (177806சி) |
| (177850ஏ) | (177850பி) | (177850சி) |
| (177850டி) | (177852ஏ) | (177932ஏ) |
| (177939ஏ) | (177939பி) | (177950ஏ) |
| (180402ஏ) | (180402பி) | (180402சி) |
| (180402டி) | (180446ஏ) | (180461ஏ) |
| (180469ஏ) | (181323ஏ) | (181343ஏ) |
| (181505ஏ) | | |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (179661ஏ) | (179685ஏ) | (184029ஏ) |
| (184030ஏ) | (184030பி) | (184039ஏ) |
| (184041ஏ) | (184041பி) | (184045ஏ) |
| (184046ஏ) | (184058ஏ) | (184061ஏ) |
| (184065ஏ) | (184067ஏ) | (184072ஏ) |

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீண்டும் நடமாடும் சேவைகள்

வளலாய்,பெப்.26

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீண்டும் நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும், அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்தில் அடுத்தமாதம் 13ஆம் திகதி செவ்வாய்கிழமையும் நடமாடும் சேவைகள் நடைபெறும்.

ஊரெழுவில் நடைபெறும் நடமாடும் சேவையில் ஊரெழு, உரும்பிராய் கி.அ.பிரிவின் நான்கு பிரிவுகள், அச்செழு ஆகிய கிராம அலுவலர் பிரிவு மக்களும் -

அச்சுவேலியில் நடைபெறும் சேவையில் வளலாய், இடைக்காடு, தம்பாலை/கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலி மூன்று பகுதிகள் நவக்கிரி, ஆவரங்கால் இரண்டு பிரிவுகள், புத்தூர் மூன்று பிரிவுகள், வாதரவத்தை கிராம அலுவலர் பிரிவு மக்களும் பங்கு பற்றி தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையின்போது நிவாரண முத்திரை, பொதுசன உதவிப்பணம், கிராம அபிவிருத்தி, சொத்து இழப்பு நஷ்டஈடு, புனர்வாழ்வு, காணி, அடையாள அட்டை, ஓய்வூதியம், வாகனப் பதிவு ஆகியவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிக்கப்படும் என்றும்.

ஏனைய திணைக்கள சேவைகள் வங்கிச் சேவைகள் ஆகியனவும் இடம்பெறும் என்றும் கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (க-178)

## மாலை நேர வகுப்புகள்

புன்னாலைக்கட்டுவன்,பெப்.26

பாடசாலைக் கல்வியை இடையில நிறுத்திய மாணவ மாணவிகளுக்கான மாலை நேர கற்றல் வகுப்புக்கள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் கணேசா சன சமூக முன்பள்ளி கட்டடத்தில் ஆரம்பமாகும்.

இந்த மாலை நேர வகுப்புக்களில் தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் பொழுது போக்கு விளையாட்டுக்களும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இடம்பெறும். (ஜ-133)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

புன்னாலைக்கட்டுவன்,பெப்.26

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் தற்பேது கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு கொழும்பு இராம கிருஷ்ணமடாலய உதவித்திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் கிடைத்துள்ளன.

இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்கிவரும் மேற்படி பாடசாலையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 235 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். அந்த மாணவர்களுக்கே இக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஜ-133)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. சின்னத்துரை புவனேந்திரன்

கூட்டுறவுச் சேவையில் நீண்ட காலம் பணி புரிந்து 22. 02. 2001இல் தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறும் நல்லூர் ப.நோ.கூ. சங்கக் களஞ்சியப் பொறுப்பாளரும் எமது நண்பருமாகிய திரு. சி. புவனேந்திரன் அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றோம்.

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (84620)

சு.விஜயகுமாரன் (விஜயன்),
ஆ.சண்முகநாதன் (குஞ்சு).

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
05
-
12
-
1965



ஆண்டவன் அடியில்
26
-
02
-
1994

செல்வன்

## நாகமுத்து சக்குணபாலா (அங்கு)

(ஜேர்மனி)

**திதி: 26.02.2001**

ஏழாண்டுகள் சென்றாலும் ஏற்க முடிகிறதா
உன் மறைவை?
ஏனோ எமை மறந்து எட்டாத்தூரம்
சென்றனையோ?
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உம் நினைவால்
ஏங்கித் துயருறும்:
ஐயா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிமார்,
தம்பி பாலன் (லண்டன்),
மாமன்மார், மாமிமார்.

M.N.மகேந்திரன்
(அண்ணன்),
*மாரியம்மன் லேன்,*
*திருநெல்வேலி.* (84626)

# அவசர கலந்துரையாடல்

ஒப்பந்த அடிப்படையிலான திட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான அவசர கலந்துரையாடல்.

*இடம் :* **D.M.I** (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

*காலம் :* 27.02.2001 செவ்வாய்க்கிழமை காலை 9.00 (மு.நே)

முக்கிய குறிப்பு:- சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

(84627)

**து.முருகதாஸ்**
(செயலாளர்)

# பாராட்டி வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்

கோண்டாவில்

## *திரு. சின்னத்துரை புவனேந்திரன் அவர்கள்*

*(களஞ்சியப் பொறுப்பாளர், நல்லூர் M.P.C.S.)*

ஓய்வுபெறும் இந்த நன்னாளில் அவருடைய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, அன்பு, சமய, சமூக சேவைகள் என்றும் பாராட்டுக்குரியவை. இவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என அன்னையைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

பிரதமகுரு **சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்,**
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,
சுதுமலை.

(84628)


# மரண அறிவித்தல்

## திருமதி சின்னையா சின்னம்மா

யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்டு திருமதி சின்னையா சின்னம்மா 24.02.2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும், சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகமணி, காலஞ்சென்ற நாகம்மா மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்மலர் (நோர்வே), செல்வரத்தினம் (கார் தரகர்), பவளமலர், கமலாம்பிகை, வாலாம்பிகை, இராசரத்தினம் (யாழ். மரக்கறி வியாபாரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வீரசிங்கம், பாக்கியம், பஞ்சலிங்கம், திம்பிராசா, பீதாம்பரம், பவளராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2001) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு தகனத்திற்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*நாகம்மாள் கோயில் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
**-குடும்பத்தினர்.**
(84618)

# மத்திய ஆசியாவில் நேற்று பலமான பூமியதிர்ச்சி!

புதுடில்லி, பெப் ,26

மத்திய ஆசியப் பிரதேசங்களில் நேற்றுக் காலை பலம் வாய்ந்த பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

கஜகஸ்தான் எல்லை அருகே வட ஆப்கானிஸ்தானில் மையம் கொண்டிருந்த இந்தப் பூமியதிர்ச்சி 6 7 ரிச்டேர் அளவு கொண்டிருந்ததாக நிலநடுக்க அளவியலாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றுகாலை 7.50 மணிக்கு ஏற்பட்ட இந்தப் பூமியதிர்ச்சி ஒரு நிமிடநேரம் நீடித்துள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத், ராவல்பிண்டி, பெஷாவர் ஆகிய நகரங்களில் பூமியதிர்ச்சியின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டதாக பாகிஸ்தான் புவியியல் ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் சௌத்ரி கலீஸ் உல் ரம்யான் தெரிவித்தார்.

இந்தியாவில் காஷ்மீர், புதுடில்லி, சண்டிகார் ஆகிய வட பகுதிகளில் பூமியதிர்ச்சியின் தாக்கம் உணரப்பட்டுள்ளது.

இதன் தாக்கம் அதிகமாக இல்லாத போதும் பாதுகாப்புக்காக மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பரந்த வெளிகளில் தங்கியிருந்தனர்.

இதேசமயம், ஜப்பானிலும் நேற்றுக் காலை பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

தலைநகர் டோக்கியோவிலிருந்து வடகிழக்கே 300 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்த இந்த நில நடுக்கம் 5.3 ரிச்டேர் அளவைக் கொண்டிருந்தது.

மத்திய ஆசியாவில் இந்த நில நடுக்கங்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து நேற்று மாலைவரை தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. [ஒ]

## தமிழகத்தில் பூகம்பம்

சென்னை, பெப். 26

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை, தென்காசி ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை 2.40 மணிக்கு லேசான நிலநடுக்கம் உணரப்பட்டது.

ஒரு சில நிமிடங்கள் நீடித்த இந்த நில நடுக்கத்தினால் சேதம் எதுவும் ஏற்படாத போதிலும் மக்கள் பயத்தால் வீடுகளை விட்டு வெளியேறி பல மணித்தியாலங்கள் கழித்துத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

## ஜகார்த்தா அருகே நிலநடுக்கம்

ஜகார்த்தா, பெப், 26

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் பிற்பகலில் சக்தி வாய்ந்த பூமியதிர்ச்சி ஏற்பட்டதாக ஷாங்கூனில் உள்ள பிரெஞ்ச் நில அதிர்வு ஆய்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பூமியதிர்ச்சி 7.1 ரிச்டேர் அளவைக் கொண்டிருந்ததாகவும் ஆய்வுக்கழகம் கூறியது. (ஒ)

## மத்திய கிழக்குக்குச் சென்றுள்ள அமெரிக்க அமைச்சரை எதிர்த்து பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம்

ஜெருசலேம், பெப். 26

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜெனரல் கொலின் பவுலின் மத்திய கிழக்கு விஜயத்துக்குஎதிர்ப்புத்தெரிவித்து மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

மேற்குக்கரை நகரான நக்லூஸ் நகரில் பெரும் எண்ணிக்கையிலான பலஸ்தீனர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வளைகுடாப்போரின் போது அமெரிக்காவின் தலைமைத் தளபதியாகப் பதவி வகித்த ஜெனரல் பவுல், அப்பாவி மக்களைக் கொன்று குவித்ததாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலஸ்தீனர்கள் குற்றஞ் சாட்டினர்.

அண்மையில் ஈராக் மீது அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதல்களைக் கண்டித்து அமெரிக்கத் தேசியக் கொடியை ஆர்ப்பாட்டக்காரர்கள் எரித்தனர். (ஒ-7-6)

## அமெரிக்காவும் ரஷ்யாவும் இணக்கம்

அமெரிக்காவும் ரஷ்யாவும் தற்காப்புக் கொள்கை குறித்த பதற்றத்தைத் தணிக்க நிபுணர்கள் நிலையில் பேச்சு நடத்த இணங்கியுள்ளன.

எகிப்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவுலும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோவும் நடத்திய ஆலோசனையையடுத்து இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

தேசிய ஏவுகணைத் திட்டம், ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து இருநாடுகளின் உயர் அதிகாரிகள் சந்தித்து பேச்சு நடத்துவார்கள். (ஒ-7-6)

## பாதுகாப்பு உடன்படிக்கை புதுப்பிப்பு

டுபாய், பெப். 26

அமெரிக்காவுக்கும் குவைத்துக்கும் இடையிலான 10 ஆண்டுகால பாதுகாப்பு உடன்படிக்கை மீண்டும் தானாகவே புதுப்பிக்கப்பட்டதாக குவைத்தின் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

1991-ம்ஆண்டு குவைத்தைத ஈராக் ஆக்கிரமித்ததைதடுத்து இடம்பெற்ற வளைகுடாப் போர்ச் சமயத்தில் மேற்படி உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டது. (ஒ)

## பூம்புகாரில் தொல்பொருள்

தஞ்சை, பெப். 26

சோழ மன்னர்களின் தலைநகராகத் திகழ்ந்த பூம்புகாரில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய அரவன் என்ற அரிய வகை மீன்கொம்புகள்உட்பட பல தொல்பொருள்கள் தற்போது கண்டெடுக்கப் பட்டுள்ளன. (ஒ)

## நில நடுக்க அபாயத்தை அடுத்து இந்திய ஜனாதிபதி மாளிகையின் உறுதி குறித்துப் பரிசோதனை

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட, அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ள கட்டடங்கள் பூமியதிர்ச்சிக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியனவா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி குடியிருக்கும் ராஷ்டிரபதிபவன், நாடாளுமன்றக் கட்டடம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை.

அந்தக் கட்டடங்கள் மிதமான பூமியதிர்ச்சிக்குக் கூட தாக்குப் பிடிக்க முடியாதவை என்று இந்தியக் கட்டடத் திணைக்களத் தலைவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்தே குறிப்பிட்ட கட்டடங்களை நிபுணர்கள் பரிசோதித்து வருகின்றனர். (ஒ-7-6)

## புனித ஹஜ் யாத்திரைக்காக 10 லட்சம் பேர் திரண்டனர்

புனித மெக்கா யாத்திரைக்காக 10 லட்சத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் சவூதி அரேபியா வந்து சேர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அடுத்த மாதம் தொடங்கும் ஹஜ் யாத்திரையில் பங்கு பற்றுவதற்காகச் சவூதி அரேபியாவில் இதுவரை 10 லட்சத்து 52 ஆயிரத்து 570 பேர் குழுமியுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 10 லட்சத்து 7.2 ஆயிரம் இஸ்லாமியர்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றியதாகச் சவூதி அரேபிய அரசு வெளியிட்ட புள்ளி விவரங்கள்தெரிவிக்கின்றன.

## முஸ்லிம் தீவிரவாதத் தலைவர் பாகிஸ்தானில் கைதானார்

இஸ்லாமாபாத், பெப். 26

பாகிஸ்தானில் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பான சிப்பாயே ஷகாபாவின் தலைவரான அசாம் தாரிக் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன், அந்த அமைப்பின் உறுப்பினர்களான சுமார் 200 பேரும் கைதாகியுள்ளனர்.

ஈரானிய தூதரக அதிகாரி ஒருவரைக் கொன்ற குற்றத்துக்காக 'சிப்பாயே ஷகாபா' இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

அந்தச் சமயத்தில் அசாம் தாரிக் மற்றும் அவரது ஆதரவாளர்களால் கலவரங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் போன்றவை நிகழ்த்தப்படாமலிருக்கவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய பொலிஸ் அதிகாரிஒருவர் தெரிவித்தார். (ஒ-7-6)

## பொஸ்னிய இன ஒழிப்பில் ஈடுபட்ட செர்பிய அதிகாரி குற்றவாளி; ஐ.நா. விசாரணை மன்றம் தீர்ப்பு!

ஹேக், பெப். 26

பொஸ்னியாவில் முஸ்லிம் பெண்களை பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த செர்பிய இராணுவ அதிகாரிகளை குற்றவாளி என்று ஐ.நாவின் யுத்தக் குற்றங்களுக்கான விசாரணை மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குனாரக் என்ற இந்த செர்பிய அதிகாரி,பொஸ்னிய முஸ்லிம் பெண்களுக்கு பாலியல் குற்றங்களை இழைத்ததாக விசாரணை மன்றம் தீர்ப்பளித்தது.

இவருடன் விசாரணைக்குட்படுத்தப்பட்ட கோவாச், வோகோவிக் ஆகிய இரு செர்பிய இராணுவ வீரர்களும் விசாரணை மன்றத்தின் தீர்ப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

'90 களின் முற்பகுதியில் அப்போதைய யூகோஸ்லேவியாவின் பொஸ்னியாவில் வாழ்ந்த முஸ்லிம்கள் மீது அங்கு இருந்த செர்பியர்கள் இன ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

அந்தச் சமயத்தில் பொஸ்னிய நகரான வோகாவை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த செர்பிய அதிரடிப்படையினர், முஸ்லிம்களை ஆண் பெண் என்று தனித்தனிச் சிறைகளில் அடைத்தனர். ஆண்களைக் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொன்ற செர்பிய இராணுவத்தினர் பொஸ்னிய முஸ்லிம் பெண்களைப் பாலியல் வதைக்கு உட்படுத்தினர்.

உலகை உலுக்கிய இந்தக் கொடூரங்கள் குறித்து விசாரணை நடத்த ஐ நா. சபை யுத்தக் குற்றங்களுக்கான விசாரணை மன்றம் அமைத்தது.

அந்த மன்றம் முதல்கட்டமாக 'வோகா' கொடூரங்கள் குறித்து விசாரித்த வழக்கிலேயே இப்போது தீர்ப்பளித்துள்ளது.

'வோகா நகர உயர் பாடசாலையில் 15 வயது பொஸ்னிய முஸ்லீம் சிறுமியை 10 க்கும் மேற்பட்ட செர்பிய இராணுவத்தினர் பாலியல் சித்திரவதைக் குட்படுத்தியது உட்பட பல கொடூரச் சம்பவங்களை பாதிக்கப்பட்டவர்கள் விசாரணை மன்றத்தில் கண்ணீருக்கிடையில் கூறியிருந்தனர். (ஒ)

## தமிழக அரசியலில்...

## தமிழக வளர்ச்சியா? ஊழலா? தேர்தலில் தி.மு.கவின் கேள்வி

சென்னை, பெப். 26

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் மாநில வளர்ச்சியா? ஊழலா? என்பதை தி.மு.க. அடிப்படைப் பிரசாரமாகக் கொள்ளும் என்று அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க. மேடைப் பேச்சாளர்களின் பயிற்சிக் கூட்டத்தில் கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

தி. மு. க. அரசு கடந்த 5 ஆண்டு காலத்தில் மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டதாகவும் —

அ. தி மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மாநிலத்தின் வளர்ச்சிப் பாதையில் பல குறுக்கீடுகளை ஏற்படுத்தியதாகவும் கருணாநிதி குற்றஞ் சாட்டினார்.

எதிர்வரும் தேர்தலில் தமிழகத்தின் வாக்காளர்கள் தி.மு.க.வின் மாநில வளர்ச்சியை விரும்புகிறார்களா அல்லது ஜெயலலிதாவின் ஊழலை விரும்புகிறார்களா என்பதே அடிப்படைப் பிரசாரமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-7-6)

## தி.மு.க.-- ம.தி.மு.க. இணைப்பு ஒருபோதும் சாத்தியமில்லை கண்ணப்பன் தெரிவிப்பு

கோவை, பெப். 26

தி.மு.கவில் ம.தி.மு.க. இணைந்துவிடும் சாத்தியம் இல்லை என்று ம.தி.மு.க. பொருளாளரும் மத்திய இணை அமைச்சருமான மு.கண்ணப்பன் தெரிவித்தார்.

கோவையில் செய்தியாளரிடம் பேசிய கண்ணப்பனிடம், மாநிலத்தில் தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தி.மு.க.வுடன் இணைந்து விடுமா என்று கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

தி. மு. க. வில், அதன் தலைவர் கருணாநிதிக்கு மிக நெருக்கமானவராக இருந்த வை. கோபாலசாமி அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று ம. தி. மு. கவைத் தொடக்கினார்.

தற்போது தி. மு. கவும், ம. தி. மு. கவும் ஒரே கூட்டணியில் இடம்பெற்றிருப்பதால், மீண்டும் தி. மு. கவுடன் ம. தி. மு. கவினர் இணைந்து விடுவாம் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## பளை மாணவருக்கு!

யாழ்ப்பாணம், பெப். 26

பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த — 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கான கொடுப்பனவும்—

இக்கல்லூரி மூலம் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் கிடைக்கப்பெற்ற ஒருதொகுதி அடையாள அட்டைகளும்—

புலோலி றே.க த.க. பாடசாலையில் வைத்து நாளை செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளன. (உ-5)

## கணனிப் பயிற்சி

காரைநகர், பெப். 26

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் முறைசாரா கல்விப் பயிற்சி நெறியின் கீழ் கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகள் இந்தப் பயிற்சி நெறியை மேற்கொள்ள முடியும் எனவும் இதற்கான விண்ணப்பங்களை இம் மாத இறுதிக்குள் கல்லூரியில் சமர்ப்பிக்குமாறும் அதிபர் சு. வேலாயுதபிள்ளை கேட்டுள்ளார். (ஐ-73)

### பயிற்சியைப் பூர்த்தி செய்துகொண்டு

# கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வருவோரை தீவகத்தில் நியமிக்குக!

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சியை முடித்து இவ்வாண்டு வெளியேறும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை தீவகவலயப் பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டும்.

— மேற்கண்டவாறு வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வியமைச்சைக் கோரும் தீர்மானம் ஒன்றை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை நிறைவேற்றியுள்ளது.

நல்லூரில் உள்ள சங்க அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கூட்டத்தில் தீவகத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்கள் இடமாற்றம் ஆகியன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ தீவகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள சகல ஆசிரியர்களும் தமது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும்.

★ மாகாணமட்ட இடமாற்றச் சபையின் விதிமுறைகளுக்கு முரணாக இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குப் பதில் ஆசிரியர்கள் வழங்கி அவர்களது இடமாற்றம் ரத்துச்செய்யப்படவேண்டும்.

★ வைத்தியநிபுணர்களால் சிபார்சு செய்யப்படும் ஆசிரியர்களின் இடமாற்றத்தை மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை பிற்போடவேண்டும்.

★ ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்படும் ஆசிரியர் நியமனங்களின்போது தீவுப்பகுதிக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

★ பட்டதாரி ஆசிரிய நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள மெய்யியல், சமூகவியல், புள்ளிவிவரவியல், புவியியல்துறை சார்ந்த பட்டதாரிகளை தீவகத்துக்கு நியமிக்கவேண்டும்.

★ எதிர்காலத்தில் ஆசிரிய சேவைக்குள் ஆசிரியர்களை உள்வாங்கி, பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது அவர்களின் வெளிமாவட்டச் சேவை, கஷ்டப் பிரதேச சேவை ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்கப்படவிருக்கின்றன. எனவே ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து தீவகத்தில் பணி செய்ய முன்வர வேண்டும். (3)

## பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிதியம்

புன்னாலைக்கட்டுவன் பெப். 26

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சி, இணைப்பாடவிதான செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு ஐந்து நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டுத் தனித்தனியாக நிரந்தர நிதிய வைப்புக்கள் வங்கியில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜி.சி.ஈ. உயர்தர புலமைப் பரிசில் நிதியம், வருடாந்த பரிசளிப்பு விழா நிதியம், வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிதியம், ஐந்தாம் தர புலமைப் பரிசில் நிதியம், நூலக அபிவிருத்தி நிதியம் என ஐந்து நிதியங்களும் செயற்பட்டு வருகின்றன.

பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அதிபர் ஆகியோர் இணைந்து பாடசாலை மாணவர்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மேற்படி நிதியங்களை ஆரம்பித்துள்ளனர்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரி தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை நாவல் இலக்கியம் தொடர்பான செயலமர்வு நடைபெற்றது.

தமிழ் மன்றத் தலைவி செல்வி ஆர். டயானி தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் பதிவாளரும் பிரபல எழுத்தாளருமான கலாநிதி க. குணராசா நாவல் இலக்கியம் பற்றி கருத்துரை வழங்கினார்.

## வல்வை நகரசபை தொழிலாளர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

நெல்லியடி, பெப். 26

கடமையில் இருந்த தொழிலாளி ஒருவரை இரும்புக் கம்பியால் தாக்கிவிட்டு தலைமறைவாகியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் பொலீஸ் நிலையத்தில் சரணடைந்ததை அடுத்து, வல்வை நகர சபை தொழிலாளர்களினால் கடந்த ஐந்து நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

வல்வை நகர சபையின் விளையாட்டு மைதானத்தில் பணியில் ஈடுபட்டு வந்த தொழிலாளி ஒருவர் கடந்த 19 ஆம் திகதி இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்திருந்தார்.

இதனையடுத்து, அன்றிலிருந்து நகரசபைத் தொழிலாளிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்

இச்சம்பவம் தொடர்பாக, வல்வை நகர சபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

இதனையடுத்து, தொழிற்சங்கப் பிரதிநிதிகள், வல்வை நகர சபை முதல்வர் ஆகிய பொறுப்பான உயர்ந்துறை யாடல், வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நகர சபைத் தொழிலாளி மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் மீது, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கு உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் சந்தேக நபரான, கொம்மாந்தறையைச் சேர்ந்த, கிருஷ்ணபிள்ளை வர்ண பாலசுந்தரம் (வயது 35) என்பவர், சனிக்கிழமை வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார்.

இதனையடுத்து, வல்வை நகர சபை ஊழியர் மேற்கொண்டு வந்த 5 நாள் வேலை நிறுத்தம் சனிக்கிழமை நண்பகலுடன் கைவிடப்பட்டதாக, வல்வை நகர சபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

சந்தேக நபர், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் இன்று திங்கட்கிழமை காலை ஆஜர் செய்யப்படுவார் என வல்வெட்டித்துறை பொலீஸ் இன்ஸ்பெக்டர் தெரிவித்தார். (உ-109)

## போக்குவரத்து ஒழுங்கு குறித்து மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை அடுத்து பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வை வழங்கும் திட்டம் ஒன்றை மக்கள் நலன்புரிச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்துப் பற்றிய ஒழுங்கு விதிகள் எடுத்துக் கூறப்பட்டு வருவதாக மக்கள் நலன்புரிச் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் மற்றும் இணுவில் இந்துக் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்த விழிப்புணர்வு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் —

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## காணாமல்போனோர் பற்றிய விசாரணைகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

காணாமற்போனோர் தொடர்பாக யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய பொலீஸ் நிலையங்களில் தற்போது நடைபெற்று வரும் விசாரணைகளுக்கு சமுகமளிக்குமாறு பின்வருவோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் நடைபெறும் விசாரணைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

செழுவேல் தர்மரத்தினம், சுப்பிரமணியம் புவிராஜசிங்கம், சிங்கதுரை தேவபாலன் (மூவரும் சண்டிலிப்பாய் — காணாமல் போன தர்மரத்தினம் வசீகரன் தொடர்பாக)

திருமதி பொன்னுத்துரை (2 ஆவது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் — காணாமல் போன சுப்பிரமணியம் முகுந்தகுமார் என்பவர் தொடர்பாக), இராசையா செல்வராணி (நவாலி வடக்கு மானிப்பாய் — காணாமல் போன இராசையா சசீந்திரன் என்பவர் தொடர்பாக).

ஜெயமேஹந்திரன் மோகனராணி அல்லது வல்லி ஜெயமேஹந்திரன் (காணாமல் போன பொன்னன் ரவீந்திரன் என்பவர் தொடர்பாக), பொன்னையா தர்மராசாவின் மனைவி (சண்டிலிப்பாய் — காணாமல் போன பொன்னையா ஜெயராசா தொடர்பாக)

மாலினன் வேதநாயகம், வேதநாயகம் மேரி ஜஸ்ரின் (குருநகர் — காணாமல்போன வேதநாயகம் ஜோண் எமிலியானஸ் தொடர்பாக), சுன்னாகத்தில் வசித்த வைரமுத்து கதிரவேலு (காணாமல்போன கதிரவேலு ஜெயந்தன் என்பவர் தொடர்பாக).

சுன்னாகம் பொலீஸ்நிலையத்தில் நடைபெறும் விசாரணைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

சிவசுப்பிரமணியம் பூலோகதேவி (சுழிபுரம் கிழக்கு — காணமல்போன சுப்பிரமணியம் அரியதாஸ் என்பவர் தொடர்பாக), பூந்தவல் ஆசீர்வாதம் (அம்பாள் வீதி, மல்வம் உடுவில் — காணாமல் போன ஆசீர்வாதம் பரணி என்பவர் தொடர்பாக).

கணேஷ்வரன் ஜெயலட்சுமி (அளவெட்டி மேற்கு—காணாமல் போன கனகலிங்கம் அமிர்தலிங்கம் என்பவர் தொடர்பாக), சுப்பன் இரத்தினம் (சுழிபுரம் மேற்கு — காணாமல்போன ரத்தினம் கிருஷ்ணகுமார் என்பவர் தொடர்பாக).

மகாரத்தினம் சாந்தநாயகம் (கந்தரோடை — காணாமல்போன மகாரத்தினம் சாந்தநாயகி), ஆறுமுகம் மீனாட்சி (கரவெட்டி — காணாமல்போன சின்னத்தம்பி ஜெயபாலன் என்பவர் தொடர்பாக). (உ-5-7)

## முத்திரைகளைக் காணோம்

கைதடி தபாலகத்தில் வைக்கப்பட்டிருந்த 54 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் இடப்பெயர்வின் போது காணாமல் போய் விட்டதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம் பெயர்வினைத் தொடர்ந்து கைவிடப்பட்டு இருந்த தபாலகக் கட்டடத்தை அண்மையில் அதிகாரிகள் சென்று பார்வையிட்டபோதே இந்த முத்திரைகள் காணாமல் போனது பற்றித் தெரியவந்தது. (உ-5)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப். 26

நெடுந்தீவு, மேற்கு கரமத்தைக் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மாசிமக இலட்சார்ச்சனை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறும்.

மாசிமக தினமான எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறும் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம், நவசக்தி அர்ச்சனை ஆகியவற்றுடன் இலட்சார்ச்சனை பூர்த்தி அடையும். (3)

★ ★ ★

ஊரெழு — சுந்தரபுரி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தான பஞ்சதசதின மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவிருக்கின்றது. (3-ரி)

★ ★ ★

கோண்டாவில் வடக்கு சாந்தியோலை நிக்காளை ஸ்ரீகாளியம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் இடம்பெறும்.

தினமும் காலை பத்து மணிக்கு அபிஷேகமும் பிற்பகல் 5 மணிக்கு அம்பாள் வீதியுலாவும் இடம்பெறும். (6)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சதுர்த்தி திருவிழா 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூஜை வழிபாட்டுடன் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து விசேட மேளதாள வாத்தியங்களுடன் சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (உ-133)

## அரிவு வெட்டும் இயந்திரம்

சண்டிலிப்பாய், பெப். 26

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் விவசாயிகளின் நலன் கருதி நெல் அரிவு வெட்டும் இயந்திரம் ஒன்றைக்கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

உடுவில் கமநல சேந்திர நிலையத்தின் அனுசரணையுடன் யாழ். கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக குருநாகலில் உள்ள தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றிடமிருந்து இந்த அரிவு வெட்டும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்குச் சம்மேளனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கு ஒன்றே கால் இலட்சம் ரூபா செலவாகும் என்றும், இதன் மூலம் இப் பகுதி விவசாயிகள் குறைந்த கட்டணத்தில் நெல் அறுவடைக் காலங்களில் அரிவு வெட்ட முடியும் என்றும் சம்மேளனத்தின் தலைவர் இ. பொ. மா. க. முதலியார் தெரிவித்தார்.

# புலிகளைத் தடைசெய்யத் தவறினால்
# என்ன செலவானாலும் பிரிட்டன் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு!

## சிஹல உறுமய அறிவிப்பு

கொழும்பு,பெப்.26

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதில் பிரிட்டிஷ் அரசு தனது கடமையைச் செய்யத்தவறும் பட்சத்தில் எத்துணை விலை கொடுத்தேனும் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சிஹல உறுமயவின் செயலாளரும் எம்.பியுமான திலக் கருணாரத்தின.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விவகாரத்தில் பிரிட்டிஷ் அரசு தவறும் பட்சத்தில் அந்த நாட்டு அரசுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வழக்குக்கு ஒரு கோடி தேவையென தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியை எமது கட்சியின் சர்வதேசக் கிளைகள் ஊடாகவும், உள்நாட்டிலும் சேகரிக்கவும் உத்தேசித்துள்ளோம்.

- இப்படி அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-7-20)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.26

இம்மாதம் 24ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:

### சாவகச்சேரி

(180501ஏ)

### கரவெட்டி

| | | |
|---|---|---|
| (165236ஏ) | (165236பி) | (168023ஏ) |
| (168023பி) | (168023சி) | (168023டி) |
| (176233ஏ) | (176233பி) | (176233சி) |
| (176233டி) | (176233ஈ) | (177748ஏ) |
| (177748பி) | (177748சி) | (177802ஏ) |
| (177802பி) | (177858ஏ) | (177870ஏ) |
| (177870பி) | (180608ஏ) | (181110ஏ) |
| (181204ஏ) | (181229ஏ) | (181229பி) |
| (181229சி) | (181229டி) | (181261ஏ) |
| (181261பி) | (181271ஏ) | (181348ஏ) |
| (181348பி) | (182263ஏ) | (182263பி) |
| (182291ஏ) | (182316ஏ) | (182316பி) |
| (182316சி) | (182323ஏ) | (182358ஏ) |
| (182359ஏ) | (182359பி) | (182376ஏ) |
| (182388ஏ) | (182388பி) | (182399ஏ) |
| (182423ஏ) | (182479ஏ) | (182479பி) |
| (182479சி) | (182479டி) | (182512ஏ) |
| (182530ஏ) | (182561ஏ) | (182561பி) |
| (182561சி) | (182571ஏ) | (183533ஏ) |
| (183666ஏ) | (183675ஏ) | (183691ஏ) |
| (183691பி) | (183691சி) | (183691டி) |
| (183692ஏ) | (183770ஏ) | |

### நல்லூர்

(182815ஏ)

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (172472ஏ) | (172472பி) | (176291ஏ) |
| (176291பி) | (176361ஏ) | (176361பி) |
| (177653ஏ) | (177653பி) | (177792ஏ) |
| (177792பி) | (177792சி) | (177800ஏ) |
| (177800பி) | (177800சி) | (177800டி) |
| (177800ஈ) | (177800எவ்) | (180409ஏ) |
| (180409பி) | (180507ஏ) | (181136ஏ) |
| (181136பி) | (182204ஏ) | (182395ஏ) |
| (182395பி) | (182395சி) | (182395டி) |
| (182395ஈ) | (182395எவ்) | (182472ஏ) |
| (182554ஏ) | (182560ஏ) | (182560பி) |
| (182563ஏ) | (182563பி) | (182563சி) |
| (182563டி) | (183571ஏ) | (183618ஏ) |

### சண்டிலிப்பாய்

| | | |
|---|---|---|
| (142169ஏ) | (179467ஏ) | (181503ஏ) |
| (181503பி) | (182580ஏ) | (182870ஏ) |
| (182870பி) | | |

### தெல்லிப்பழை

(174966ஏ)

### உடுவில்

| | | |
|---|---|---|
| (174833ஏ) | (178241சி) | (178241டி) |
| (178647ஏ) | (178647பி) | (178647சி) |
| (178647டி) | (179204ஏ) | (179204பி) |
| (181550ஏ) | (181550பி) | (182713ஏ) |
| (182713பி) | (182713சி) | (183044ஏ) |
| (183044பி) | (183044சி) | (183044டி) |
| (183044ஈ) | (183241ஏ) | (183241பி) |
| (183254ஏ) | (183254பி) | |

(க-10)

# ஊடகவியல் பற்றிய பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.மறைமாவட்ட சமூகத் தொடர்புசாதன ஆணைக்குழுவினது ஏற்பாட்டில் 'ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்' என்ற பயிற்சிப்பட்டறை அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதான வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சக வளாகத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் பத்திரிகைத்துறை மற்றும் வானொலித்துறை உட்பட ஊடகத்துறைகளில் அனுபவம் உள்ளவர்கள் கருத்துரைகள் வழங்குவர்.

கருத்தரங்கில் பங்குபற்றும் பயிற்சியாளர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள எவரும் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ளமுடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(உ-6)


சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்.

**அடிப்படை மனைப் பொருளியல்**

**பயிற்சிநெறி - 2001**

மேற்படி பயிற்சிநெறிக்கு மகளிர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர், சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்துடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விண்ணப்ப முடிவு திகதி :- 10.03.2001

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
24. 02. 2001
தொ. பே. இல. :-070-212380

-பொதுமுகாமையாளர்.

(G/15466)



**பாராட்டி மகிழ்கின்றோம்**



எமது பாடசாலை முதல்வர்

உயர்திரு. சின்னத்துரை இராமலிங்கம்

(B.A.(Cey)Dip.in.Ed. SLPS 2-1)

அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் 2-1 க்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி மகிழ்கின்றோம். எதிர்காலத்தில் மேலும் பல பதவி உயர்வுகள் பெற எமது நல்வாழ்த்துக்கள்!

இயக்கச்சி.

திரு.திருமதி தனபாலசிங்கம், பிள்ளைகள் (விஜி,தனுசா)

(84638)


## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுகிடையே நடைபெற்று வரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15,17,19 வயதுப்பிரிவுகளுக்கான இறுதியாட்டங்கள் இன்று திங்கட்கிழமை 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் கோட்ட உதவிக கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டத்தில் மூன்று பிரிவுகளிலும் முதலிடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் மூன்று அணிகளையும் எதிர்த்து முறையே பண்டத்தரிப்பு ஜசிந்தா, மானிப்பாய் மெமோறியல், இளவாலை கன்னியர் மடம் ஆகிய பாடசாலை அணிகள் மோதுகின்றன. (உ-90-ரி)

* * *

இலங்கை பட்மின்டன் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட பட்மின்டன் சங்கம், பதிவு செய்யப்பட்ட கழகங்களின் குழுக்களுக்கிடையே பட்மின்டன் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 2,3,6,9 ஆம் திகதிகளில் சென்ஜோண்ஸ் அக்கடமியில் ஆட்டங்கள் நடைபெறும்.

ஆண்கள் அணிகளுக்கும், பெண்கள் அணிகளுக்கும் தனித்தனியாக சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொலைபேசி இயங்கவில்லை

யாழ்ப்பாணம் சுண்டிக்குளிப் பகுதியில் உள்ள நாணயக்குற்றித் தொலைபேசி கடந்த 10 மாதங்களாகச செயலிழந்த நிலையில் இருக்கின்றது.

கடந்த மே மாதத்திற்குப் பின்னர் இத்தொலைபேசி இயங்காமல் இருப்பதால் இப்பகுதி மக்கள் தொலைபேசி அழைப்புக்களைப் பெறுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இது தொடர்பாக ரெலிகொம் நிறுவனத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபோதிலும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

(உ-5)

# மரண அறிவித்தல்கள்

## பிரான்சிஸ் லிங்டன்
### (சேவிஸ் நிலைய ஊழியர்)

நாயன்மார்கட்டு, அம்பாள் வீதியைச் சேர்ந்த பிரான்சிஸ் லிங்டன் 25.02.2001 அன்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், லிங்கேஸ்வரி, பாலகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராஜேஸ்வரியின் அன்பு மருமகனும், யோகராசா ஜெகம்புகழ்ராசா, குருபரன், பாக்கியலட்சுமி, தயாபரன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஊழியர்) ஆகியோரின் மைத்துனரும், தங்கராசா, வசிகலா, வக்சலாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நல்லூர் 33, மூத்த விநாயகர் வீதி இல்லத்தில் இன்று (26.02.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.தயாபரன் (மைத்துனர்)
(கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஊழியர்)

*33,மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர்.* (84639)

## திருமதி பார்வதி அமிர்தலிங்கம்
### (நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், **94/1,**புங்கன்குளம் வீதியை வசிப்பிடமாகவும், 35, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி அமிர்தலிங்கம் 24.02.2001 சனிக்கிழமை இரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தையலம்மை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற தம்பையா - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் மாசிலாமணி (ஓய்வுபெற்ற மருந்தாளர்), வரதலட்சுமி, ஜெயலட்சுமி, இராசலட்சுமி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம்), வேதநாயகி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கச்சேரி), மருதயினார் (Surveyor - Botswana), புனிதவதி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்) **(London)**, மகாலிங்கம் **(Germany)**, திலகேஸ்வரி **(London)** ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற காமாட்சி (நெடுந்தீவு) மற்றும் பரநிருபசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), பழனிவேல் (வர்த்தகர்), மகாதேவன் (C.T.B), சாம்பசிவம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), இரத்தினேஸ்வரி **(Newzealand)**, சுரேந்திரநாதன் **(London)**, நேசமலர் **(Germany)**, சிவநேசன் **(London)** ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், கோபாலபிள்ளை மற்றும் இராசையா, இராசம்மா, கணபதிப்பிள்ளை, காராளபிள்ளை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2001) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*35, அச்சுக்கூட ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (84630)

தகவல்:
அ.மாசிலாமணி (மகன்)
மா.சாம்பசிவம் (மருமகன்)

## செல்லத்தம்பி பசுபதிப்பிள்ளை

சுதுமலை வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகக் கொண்ட செல்லத்தம்பி பசுபதிப்பிள்ளை 23.02.2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தவராஜா( முன்னாள் ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, தற்போது நியூசிலாந்து), தயாபரன்(கொழும்பு), பத்மராஜா(மோகன் வீடியோ அன் ஸ்ருடியோ, மானிப்பாய்), மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமணா கிருஷ்ணதேவி, ஜெயலஷ்மி, தயாளினி, வசந்தமாலா ஆகியோரின் அன்பு மாமனாரும், பைரவி, நிரோஷன், கோபிகிருஷ்ணா, ஜெயகிருஷ்ணா, ஹரிகிருஷ்ணா, ராதாகிருஷ்ணா, சுலக்சன், தனுசன், நிசாலினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(27.02.2001) செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணிக்கு சுதுமலைவடக்கு, இணுவில் றோட், மானிப்பாயிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'இராஜேபதி'*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (84637)

தகவல்:
ப.பத்மராஜா(மோகன்)
ப.மனோகரன்
(மகன்மார்)

## நாகமுத்து திருநாவுக்கரசு

வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகமுத்து திருநாவுக்கரசு நேற்று (25.02.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை (மாவடி)யில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (26.02.2001) திங்கட்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானததுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*'வட்டு.கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.* (84641)

தகவல்:
தி.புவனேஸ்வரி (மனைவி)

## கிருஷ்ணபிள்ளை யோகநாதன்

232, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை யோகநாதன் நேற்று (25.02.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும் குணராசா, ரஞ்சினிதேவி, மாலினிதேவி, சறோஜினிதேவி, தவமணிதேவி, கிருஷ்ணன் மற்றும் காலஞ்சென்ற தவராசாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2001) பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

*232,கண்டி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம* (84642)

தகவல்:
மகாலிங்கம் தவமணிதேவி
(மகள்)

# ஆசிரியர்களின் சம்பள நிலுவை புத்தாண்டுக்கு முன் கிடைக்கும்

## கல்வி அமைச்சர் உறுதிமொழி

திருகோணமலை,பெப்.26

வடக்கு- கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதிருக்கும் சம்பள நிலுவைகள் எதிர்வரும் தமிழ்- சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் வழங்கப்படும்.

- கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த நேற்று முன்தினம் கொழும்பில் வைத்து இத்தகவலை தன்னிடம் தெரிவித்ததாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கூறியுள்ளார்.

கடந்த வருடத்துக்கான இடர்காலக் கொடுப்பனவுகளை எதிர்வரும் ஜூன் மாதம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி மேற்கொள்வதாகக் கல்வி அமைச்சர் தன்னிடம் உறுதியளித்தார் எனவும் - த.மகாசிவம் மேலும் தெரிவித்தார். (உ-7)

# படையினருடன் பொதுமக்களை இணையக் கோருகிறார் பிரதமர்

## 3,500 பேர் படையில் சேர்ந்ததாக அவர் தகவல்

கொழும்பு,பெப்.26

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பொதுமக்கள் படையினருடன் இணைந்துகொள்ள வேண்டும்.

- இப்படிக் கோரியுள்ளார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா.

கொழும்பு இராணுவ வைத்திய சாலையில் அமைக்கப்பட்ட புதிய சத்திர சிகிச்சை நிலையத்தை நேற்றுத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து 3 ஆயிரத்து 500 பேர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். மேலும் 7 ஆயிரம் இளைஞர்கள் மூன்று வருடத்தில் இராணுவத்தில் இணைந்துகொள்வார்களானால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும்.

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான சகல வசதிகளும் படையினருக்குச் செய்து கொடுககப்பட்டுள்ளன். எனினும் இராணுவத்தில் மனித சக்தி வளம் குறைநதே காணப்படுகின்றது- என்றார். (உ-3-7-ரி)

### உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கொழும்பு,பெப்.26

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர் ஊடாகவும் -

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாகவும் -

விண்ணப்பங்களை அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார்.

விண்ணப்பங்கள் தொடர்பான விவரங்களை பரீட்சை ஆணையாளர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார். (3-ரி)

### மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியோடு இந்தச் சுவரொட்டி தொடர்புடையது எனச் செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

நேற்றுப் பிற்பகல் வரை இச் சுவரொட்டிகள் காணப்பட்டன. நகருக்கு வந்த மக்கள் இச்சுவரொட்டியை அவதானித்து அதில் கூறப்பட்டவற்றை வாசித்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (உ)

### புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"எதையும் பெற்றுக்கொள்ளாமல் -அடையாமல் - முடிவின்றிப் பேசிக கொண்டிருப்பது பயனற்றது என்று நோர்வேத் தூதரே கூறியுள்ளார். ஆனால் அந்தத் தகவல் மறைக்கப்பட்டுவிட்டது. ஆனால் புலிகளுடன் கலந்தாலோசனை செய்வது குறித்து இலங்கை அரசு பரிசீலித்து வருவதாகச் செய்திகளின் வடிவத்தில் வதந்திகள் பரப்பப்படுகின்றன" - என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களிலிருந்து புலிகள் அந்நியப்படுத்தப்படுவதாகவும், ஈ.பி.டி.பி. அதிக ஆதரவைச் சம்பாதித்து வருவதாகவும் இந்தப் பேட்டியில் டக்ளஸ் தேவானந்தா பல தடவைகள் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இம்முறை நான்கு ஆசனங்களைப் பெற்ற தனது கட்சி அடுத்த தேர்தலில் முழு ஆசனங்களையும் கைப்பற்றும் என்றும் அவர் சொன்னார்.

புலிகளுடன் பேசும் எந்த நோக்கமும் அரசுக்குக் கிடையாது என்பதும், இந்த நிலைப்பாட்டை நோர்வேத் தூதுவரும் ஆதரிக்கிறார் என்பதும் இந்தப் பேட்டியில் அவர் வெளியிட்ட முக்கிய தகவல்கள் ஆகும்.

இத்தகவல்கள் -

புலிகளுடனான உத்தேசப் பேச்சுக் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது அரசாங்கமும் பகிரங்கமாக எடுத்திருக்கும் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறானது என்பது குறிப்பிடத்தக்கது என இந்தப் பேட்டி பற்றிய விவரத்தை வெளியிட்ட கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்தது. (உ)

# சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக அறிவித்த யுத்தநிறுத்தம் பாலசிங்கத்துடன் அவர் நடத்திய பேச்சுக்களை அடுத்து மேலும் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டது தெரிந்ததே.

அந்தப் பேச்சுக்களின் பயனாக விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை நீடித்துள்ள நேரத்தில் -

இந்தியா சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயின் முன் முயற்சி, கண்காணிப்புக் குழு ஆகியன தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்திவிட்டு கொழும்பு திரும்பும் சமயத்தில் -

சொல்ஹெய்ம் தனது முயற்சியின் பயனாக எட்டியுள்ள முன்னேற்றகரமான ஆலோசனைகளுடன் கொழும்பு வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

# வலிகாமத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழைக்குச் சென்ற அமைச்சர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியையும் ஆலய நிர்வாகத்தினரையும் சந்தித்தார்.

அங்கு நடந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட அமைச்சர் துர்க்கையம்மன் ஆலயத்தால் நடத்தப்படும் மகளிர் இல்லம், அநாதைச் சிறுவர் இல்லம் ஆகியவற்றைப் பார்வையிட்டார்.அங்கு துர்க்கா துரந்தரியால் அளிக்கப்பட்ட மதியபோசனத்திலும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திருமதி பா.ஸ்ரீபாஸ்கரனும் பங்கு பற்றினார்.

இதனையடுத்து வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து மல்லாகம், சுன்னாகம் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி முகாம்களில் வாழும் மக்களையும் சந்தித்து அங்குள்ள மக்களின் குறைநிறைகளையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் சுகவீனமுற்ற நிலையில் தங்கியுள்ள அதிவணக்கத்துக்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும் சென்று அமைச்சர் டக்ளஸ் சந்தித்தார்.

மானிப்பாய், சங்கானை, சித்தன் கேணி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிற்குச் சென்ற அமைச்சர் அங்குள்ள அரச திணைக்களங்களுக்கும் கட்சி அலுவலகங்களுக்கும் சென்றிருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கா.வே.குகேந்திரன் (ஜெகன்), ஈ.பி.டி.பி.தீவக அமைப்பாளர் ந.மதனராஜா, ஈ.பி.டி.பியின் முக்கிய பிரமுகர் த.சிவகுமாரன் (பவான்), வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் (லோகன்), வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வே.அன்ரன் ஜோண்சன் (ஜீவா), ஈ.பி.டி.பியின் வலி.வடக்கு அமைப்பாளர் தி.சிவகுமார்,சுன்னாகம் அமைப்பாளர் கமலசேகரன் (பாபு) ஆகியோரும் சென்றிருந்தார்கள்.

- இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பிரமிட் வீடியோ CD வெளியீடு
❊ வியட்னாம் வீடு
❊ எங்க சின்னராசா
❊ அதே கண்கள்
❊ சிவகவி
❊ ஆடிப்பெருக்கு
❊ ப்ரியா
❊ முள்ளும் மலரும்
விஸ்ணு வீடியோ
K.K.S. Rd
கோண்டாவில்.

A/L 2002
பங்குடைமை
(சனி,ஞாயிறு மதியம் 12மணி)
ஒரு சில அனுமதிகள் வழங்கப்படும்.
கணக்கீடு
D.SAM
DMI
யாழ்.நகர்
(C/15455)

சந்தியா மல்ரி கோட்பாட் அனுசரணையில்
எம் மண்ணின் அவலங்களை சித்தரிக்கும்
தே.தேவானந்தின்.
உயிர் விசை
(நாடக ஆற்றுகை)
இடம்: கைலாசபதி கலையரங்கு
யாழ்.பல்கலைக்கழகம்.
காலம்: 28-02-2001 புதன்கிழமை.
மாலை 3.30 (புதிய நேரம்)
கைகொடுத்தல் :20/=.50/=
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்.
கைகொடுத்தல் நிதி
NEW ANANTHAA JEWELLERS
185,Kasthuriyar Road,Jaffna.

மேகாஸ் வீடியோ
CDயிலிருந்து CDக்கு புதிய, பழைய பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும், CD யிலிருந்து கெசற்றுக்குப் பதிவு செய்து கொள்ளவும், நவீன வீடியோ கமரா மூலம் வீடியோப் படப்பிடிப்பு, உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு (PHOTO) மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும் நாடுங்கள்:
மேகாஸ் வீடியோ ஓடியோ
மிக்சிங் ஸ்ரூடியோ
23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/15433)

இணைந்த கணிதம்
பிரத்தியேக வகுப்பு
A/L-2003
N.A.சயனன் (B.Sc)
ஆரம்பம்:-
28-02-2001 புதன் 4 மணி
(பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தியாக்கப்படும்)
A/L - 2001
நேர்கோடு
A/L - 2002
வகையீடு
ஆரம்பமாகவுள்ளது.
இடம்:-வளாக வீதி,
(84523) திருநெல்வேலி.

மேகாஸ் வீடியோ ஓடியோ


✻ திருநீறு
மகாநதி ஷோபனாவின்
முருகன் பக்திப் பாடல்கள்
✻ உன்னைப்பாடும் தொழிலின்றி
T.M.சௌந்தரராஜன் முருகன் பக்திப் பாடல்கள்
மேகாஸ் வீடியோ ஓடியோ
மிக்சிங் ஸ்ரூடியோ
23,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(C/15468)

விற்பனையாகின்றன...!
மாணவர்களுக்கான வெளியீடுகள்


ஆசிரியர்: D.Sam வெளியீடு: D.M.I.
கிடைக்குமிடங்கள்: 1) D.M.I., யாழ்நகர்.
2) பூபாலசிங்கம் புத்தகசாலை- கொழும்பு, யாழ்நகர்.
3) ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்நகர்.
குறிப்பு:
"நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள்" என்னும் நூலின் 2 ஆம் பதிப்பை 26-03-2001 முதல் பெற்றுக்கொள்ளலாம்.
(C/15451)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.02.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.